


www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**26. 11. 1991 நள்ளிரவு 12. 01 இற்கு கோப்பாய் மாவீரர் மயானத்தில் நடைபெற்ற மாவீரர் சுடரேற்றும் வைபவம்.**

மாவீரர் நாளையொட்டி நடைபெற்ற போராளிகளின் அணிவகுப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பதினோராம் ஆண்டு

தை 1992



ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C.C.T - France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


www.tamilarangam.net

# சுதந்திரத்தைப் பாதுகாக்க மலையாகத் திரள்வோம்

தமிழீழம் உருவாகி வருவது எம் கண்முன்னே நிதர்சனமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் உண்மை. தமிழீழ மக்கள் ஒரு புதிய நாடாய் அமைவதற்கான தகுதி நிலையை அடைந்து வருகின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. இராணுவ ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ தமிழீழம் அப்பக்குவ நிலையை அடையும் முயற்சியில் முனைந்து நிற்கின்றது. **தமிழீழ விடுதலைப் புலிகள் சிவில் நிர்வாகத்தை ஒழுங்கு படுத்தவும், சட்ட வரம்புக்குட்பட்ட அரசாட்சியை வழங்கவும் சூழ்நிலைக்கேற்ற அரசியல் கட்டுமானங்களை நிறுவி வருகின்றார்கள். அந்த அடிப்படையிலேயே, தமிழீழக் காவற்படை, சிறைக்காவல் உத்தியோகம், நடுவர் மன்றங்கள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன.** இம்முனைப்பை மழுங்கடிக்கவும், நசுக்கவும் எதிரிகள் எடுக்கும் முயற்சிகளையும் நாம் காணத் தவறவில்லை. ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழீழத்தின் மீதும், குறிப்பாகக் குடாநாட்டின் மீதும் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளவும், இன அழிப்பைச் செய்யவும் சகல ஆயத்தங்களையும் செய்து வருகின்றது. பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களை இதற்காகப் பலி எடுக்கவும், கொன்று குவிக்கவும், அவற்றை உலகின் பார்வையிலிருந்து மறைக்கவும் தயாராகி வருகின்றது. இதற்குத் தகுந்த பதிலடி கொடுத்து தமிழீழ மண்ணையும், மக்களையும் பாதுகாக்க விடுதலைப் புலிகள் சகல தற்காப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். ஸ்ரீலங்கா அரசின் இன ஒழிப்புப் போருக்கு உதவுவது போல், இந்திய மத்திய, மாநில அரசுகள் செயற்பட்டு வருகின்றன. வழமைபோல் மாநில அரசின் ஊடாகவே இப் புலி எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய அரசு விடுதலைப் போராட்டத்திற்குத் தான் எதிரியில்லை என்று காட்டிக் கொண்டு, இரகசியமான முறையில் செயல்பட்டு வருகின்றது. உளவுத் தகவல்களை ஸ்ரீலங்கா அரசுடன் பரிமாறிக் கொள்ளல், கடற்பகுதிகளில் ரோந்துகளை அதிகரித்தல் என்பவற்றைச் செய்து வருகின்றது. அதேவேளை சர்வதேச ரீதியாக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கருவறுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றது.

சர்வதேச சமூகம் தமிழினத்தை அங்கீகரிக்கும் நிலை இன்னமும் தோன்றவில்லை. தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவும், அதன் அடிப்படையில் தீர்வு காணவும் அது முயலவில்லை. மாறாக, உள்நாட்டுப் போர், உள்நாட்டுப் பிரச்சனை என்றே வேண்டுமென்று கூறுகின்றது. இரு தேசிய இனங்களுக்கிடையே உள்ள பிரச்சனை என்பதை ஏற்க மறுத்து, பல்வேறு இனங்களுக்குள் இடையிலான பிரச்சனை என்றும், பொருளாதாரப் பிரச்சனை என்றும் சப்பைக்கட்டு கட்ட முயலுகின்றது.

இந்நிலையில் தமிழீழப் போராட்டத்தை எதிரிகளிடம் இருந்து பாதுகாக்க ஒன்று திரள்வதோடு தமிழீழப் போராட்டத்தை வெற்றிநிலைக்கு முன்னகர்த்தி சர்வதேச சமூகம் வேறுவழியில்லாது அங்கீகரிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துவதே எம்முன் உள்ள கடமையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஸ்ரீலங்கா- விடுதலைப் புலிகள்- இந்தியா



# முரண்பாடுகளும் தென்னாசியாவும்

சர்வே

தென்னாசியப் பிராந்தியத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்த கருத்துக்கள் இன்று சற்று பலமாகவே கேட்கத் தொடங்கியுள்ளன. தென்னாசியாவின் வலுச்சமநிலை **(Balance of Power)** பாதிக்கக் கூடிய சக்தியாக இன்று விடுதலைப் புலிகள் வளர்ந்துள்ளனர் என முன்வைக்கப்படும் கருத்தும் ஆழமாக ஆய்வுசெய்யப்படக் கூடிய ஒன்றே.

தென்னாசியாவில் இன்று உள்ள ஏழு நாடுகளில் நேபாளம், பூட்டான், மாலைதீவுகள் ஆகியன இந்தியாவின் 'செல்வாக்கிற்குட்பட்ட' நாடுகளாகவும் பாகிஸ்தான், பங்களாதேஷ், சிறீலங்கா ஆகியன இந்திய 'செல்வாக்கிற்குட்படாத' நாடுகளாகவும் கணிக்கப்படுகின்றன. இந்நிலையில் தமிழீழமும் புதிய சக்தியாக ( நாடாக அமையாவிட்டாலும் கூட) எழுந்து நிற்பது தென்னாசியாவின் அரசியல் போக்கில் ஒரு புதிய பரிணாமத்தினை ஏற்படுத்தக்கூடியது.

இன்று, தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டுமல்ல; உலகிலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டங்களில் மிக உக்கிரமான நிலையில் நடைபெறும் போராட்டமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வகைப்படுத்த முடியும். இப் போராட்டம் தொடர்பாக சிறீலங்கா, விடுதலைப்புலிகள், இந்தியா ஆகிய சக்திகளுக்கிடையே நிகழும் அரசியல், இராணுவ, இராஜதந்திரப் பலப்பரீட்சை தென்னாசியாவில் பலத்த தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகும். இன்றைய நிலையில், சிறீலங்கா, விடுதலைப் புலிகள், இந்தியா ஆகிய சக்திகளுக்கிடையே நிலவக்கூடிய முரண்பாடுகளைப்பற்றியும், இம் முரண்பாட்டுநிலை தென்னாசியப் பிராந்தியத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள் குறித்தும் சுருக்கமாக நோக்குவோம்.

**அரசியலில் நிரந்தர நட்போ, நிரந்தரப் பகையோ இருப்பதில்லை. நிரந்தர நலன்களே உண்டு. தமிழீழத் தேசிய இனத்தின் நலன்களும் இந்தியாவின் நலன்களும் நன்றாக இணையும் நாளில் இந்தியாவும் தமிழீழமும் கைகோர்ப்பதுகூட சாத்தியமானதே.**

**பங்குனி - 1990**
**இந்தியப்படை வெளியேற்றம்**

## ஸ்ரீலங்கா - விடுதலைப்புலிகள் முரண்பாடு

பௌத்த சிங்கள இனவாத மேலாதிக்கத்திற்கும், தமிழீழ தேசிய இனத்தின் நலன்களுக்குமிடையிலான முரண்பாடு இலங்கையின் இனப்பிரச்சனையின் பிரதான முரண்பாடாகும். இம்முரண்பாடு இன்று சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முரண்பாடாக வெளிப்படுகின்றது.

இம்முரண்பாட்டின் விளைவாக இன்று தமிழீழத் தேசிய இனத்தின்மீது இனப்படுகொலையினை நடத்திக்கொண்டிருக்கின்றது சிறீலங்காஅரசு. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தினையும் தேசிய அடையாளத்தையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையில் சிங்கள பௌத்த மேலாதிக்கம் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.

ஆனால், தமிழ்த் தேசிய இனத்தின் முன்னணிப்படையான விடுதலைப் புலிகள், மிகப் பலம்வாய்ந்த சக்தியாக வளர்ந்திருப்பதனால் இவ் இனப்படுகொலையினை முழுமையாகச் செய்துமுடிக்க முடியாமல் சிறீலங்கா அரசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

திணறுகிறது. சிறீலங்கா இரா ணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இன்று நடைபெறும் யுத்தத்தில் தமிழ்த் தேசிய இனம் உயிர்ச் சேதம், பொருட் சேதத்தினைச் சந்திக் கின்ற போதும் தனது தனித் துவத்தினையும் அடையாளங் களையும் புதுப் பொலிவுடன் மீட்டு வருகின்றது.

## முரண்பாடும் தீர்வும்

பௌத்த சிங்கள இனவாத மேலாதிக்கம் முறியடிக்கப் பட்டு, தமிழ்த் தேசிய இனத் தின் சுயநிர்ணய உரிமையினை சிங்கள தேசிய இனம் ஏற்றுக் கொள்ளும் வரையில் சிறீ லங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முரண்பாடு நீடித்தே தீரும்.

வரலாற்று நிலைமைகளுக் கேற்ப தமிழ்த் தேசிய இனத் தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் எவ்வகையில் எடுக்க நேர்ந்தாலும் சிங்கள பௌத்த இனவாத மேலாதிக் கம் முறியடிக்கப்படும் வரை இலங்கையின் இனப்பிரச்ச னையில் பிரதான முரண்பாடு தீரப்போவதில்லை. இந்நிலை ஏற்படும்வரை சிறீலங்கா அர சுக்கும் விடுதலைப் புலிகளுக் குமிடையிலான முரண்பாடு தீரப்போவதில்லை.

சுயநிர்ணய உரிமைக் கான இப் போராட்டம் தென்னாசிய பிராந்தியத் தினுள், சுயநிர்ணய உரிமை கோரிப் போராட முற்படும் தேசிய இனங்களுக்கு புதிய உத்வேகத்தி னையும் உற்சாகத்தி னையும் அளித்து வரு கின்றது. இதனால் தென்னாசியப் பிராந்தி யத்தின் அரசியற் போக் கில் மாற்றத்தினை அல்லது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒரு காரணியாக தமிழீழ விடுதலை அமைகின் றது.


www.tamilarangam.net

பிரேமதாசா

இன்னொரு வகையில் கூறு வதாயின், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்காவுக்கு மிடையில் முரண்பாடு, தென் னாசியாவின் அரசியல் போக் கையே நிர்ணயிக்கும் காரணி களில் ஒன்றாக அமைந்துவிட் டது.

## ஸ்ரீலங்கா - இந்தியா முரண்பாடு


தென்னாசியாவின் மிகப்பெரிய நாடான இந்தியா தென்னாசி யாவில் மட்டுமல்ல இந்துசு முத்திரப் பிராந்தியத்தில் பிராந் திய வல்லரசாக தன்னை நிலைநிறுத்தும் நிலைப்பாட்டை தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டின் அடிப் படையில், பிராந்திய வல்லாதிக் கத்திற்கெதிராக செயற்படும் தனது ஆளுமைக்குட்படாத நாடுகளை அடிமைப்படுத்தி வைப்பதற்கு பல்வேறு 'நெருக் குதல்களை' மேற்கொள்ளும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வரலாற்றில் முக்கி யமாகக் குறிப்பிடக்கூடிய ஒரு அம்சமாக வருகின்றது.

ஸ்ரீ லங்கா, இந்தியாவின் ஆளுமைக்குட்பட்டு செயற்ப டாத காலங்களிலெல்லாம் இந் தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்குமி டையில் முரண்பாடுகள் நில வியே வந்தது.

இன்றும் ஸ்ரீ லங்காவுக்கும் இந் தியாவுக்குமிடையில் மேற்குறிப் பிட்ட அடிப்படையிலான முர ண்பாடு நிலவிவருகின்றது.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் விடயத்திலும், இந்திய அமைதி காக்கும் படை திருப்பி அனுப்பப்பட்ட விடயத் திலும் ஸ்ரீலங்கா இந்தியாவின் முகத்தில் கரியினைப் பூசிவிட் டதென இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் கொதித்துப் போயிருந்தன. இக் கசப்பு ணர்வு இந்திரா காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின் னர் சற்று வெளிப்படையாகவே தெரியத் தொடங்கியது. தற் போதய ஸ்ரீலங்கா ஜனாதிபதி இந்திய எதிர்ப்பாளராக கணிக் கப்படுவதாலும், இந்திய எதிராக போராட விடுதலைப்



சர்வதேச கடல்பரப்பில் இந்தியப்படையால் பிடிக்கப்பட்ட கப்பல். விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல் என்று இந் தியா கூறுகின்றது.

புலிகளுக்கு ஆயுதம் கொடுத்ததாகப் பிரேமதாசாவுக்கு எதிராக குற்றஞ் சுமத்தப்படுவதாலும் இந்தியாவின் ஆளுமைக்கு அடிபணிந்து இன்றைய ஸ்ரீலங்கா அரசு செயற்படாமையினாலும், பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்தாவது ஸ்ரீலங்காவினைத் தனது ஆளுமைக்குட் படுத்த இந்தியா முனைந்துள்ளது.



இந்திரா காந்தி

இவ் அழுத்தத்தின் ஒருபகுதியாகவே கடந்த நவம்பர் 7-9 ம் திகதிகளில் நடைபெற்றிருக்க வேண்டிய 'சார்க்' உச்சிமாநாட்டினை இந்தியா குழப்பிய நிகழ்வு அமைந்தது.

அண்டைய சிறிய நாடுகளுடன் ஒரு எல்லைக்கு அப்பால் 'பலத்தின்' அடிப்படையிலேயே உறவு வைத்துக்கொள்ளும் இந்திராகாந்தி கால வெளியுறவுக் கொள்கையினை ஸ்ரீலங்கா தொடர்பாக இந்தியா மீண்டும் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இவ்வாறு இந்திய ஸ்ரீலங்கா அரசுகளுக்கிடையே நிலவுகின்ற முறுகல் நிலை தென்னாசியாவின் அரசியல் போக்கில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாகும்.

வரலாற்று ரீதியாக நோக்கும்போது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் இந்தியா-ஸ்ரீலங்கா அரசுகளிடையேயான முரண்பாடுகள் அதிகரித்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தென்னாசியப் பிராந்திய அரசுகளிடையேயான இந்தியா, ஸ்ரீலங்கா உறவுகளை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாக அமைந்துவிட்டது.

www.tamilarangam.net

## இந்தியா - விடுதலைப்புலிகள் முரண்பாடு

இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான முரண்பாடு இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களுக்கும் இடையேயான முரண்பாட்டின் வெளிப்பாடாகும்.

இந்திய ஆளும் வர்க்கம், தனது நலன்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளே இந்திய-தமிழீழ யுத்தத்திற்கும் வழி சமைத்தன. இந்திய இராணுவம் அவமானத்துக்குள்ளாகி நாடு திரும்ப வேண்டிய நிலையை ஏற்படுத்தின.



பிரபாகரன்

இந்திய அமைதி காக்கும் படையின் விடயத்தில் இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டமை இந்திய ஆளும் வர்க்கத்தினால் ஜீரணிக்க முடியவில்லை.

தென்னாசியப் பிராந்தியத்தில் முடிசூடா மன்னராக தங்களை எண்ணிக் கொள்ளும் இந்திய 'சாணக்கியர்' தமிழீழ மண்ணின் புதல்வர்கள் தமது இரத்தத்தையும் வியர்வையினையும் சிந்தி நடத்திய புனித வேள்வியில் தமது ஆணவம், ஆதிக்கம் ஆகியன பொசுங்கிப் போனதை பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.



ராஜீவ் காந்தி

இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கத்திற்கு புலிகளினால் வழங்கப்பட்ட பதிலடியினை ஒரு 'கௌரவப்' பிரச்சனையாக மட்டும் இந்தியா பார்க்கவில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்தியாவிற்கு ஏற்படுத்தப் போகும் தாக்கம் குறித்த அச்சமே தமிழீழம் குறித்த இந்தியாவின் 'அக்கறை'க்குக் காரணமாக அமைகிறது எனலாம்.

தமிழீழம் அமையுமாக இருந்தாலோ அல்லது இந்திய மாநிலங்களை விட கூடுதலான அதிகாரத்தைக் கொண்ட அரசியல் வடிவம் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வாக முன்வைக்கப்படுவதாக இருந்தாலோ அது இந்தியாவில் மத்திய மாநில உறவுகளிடையே பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

இதனால் தமிழீழ யுத்தத்தில் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசினை வெற்றி கொள்வதனையோ அல்லது விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையே நேரடியான அல்லது சர்வதேச மத்தியஸ்துடனேயோ பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதனையோ இந்தியா விரும்பவில்லை.

**தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் இன்று சர்வ தேசமெங்கும் நடைபெறுகிறது. ஈழப் போராட்டத்தை நசுக்குவதன் மூலம் தனது தேசிய இனங்களை அடக்கலாம் என இந்தியா நினைப்பது தவறு.**

விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதன் மூலமும் சர்வதேச ரீதியாக விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதிகளாக' சித்தரிப்பதன் மூலமும் மேற்குறிப்பிட்ட தனது இலக்கினை அடைந்துகொள்ள இந்தியா முயற்சிப்பது போல் தெரிகின்றது.

ராஜீவ் காந்தியின் கொலையுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் இணைத்துப் பேசப்படுவதும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட முக்கியமானவர்களுக்கு 'பிடிவிறாந்து' அனுப்பப் போவதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுவதும், சர்வதேச கடல் எல்லைக்குள் நுழைந்து விடுதலைப் புலிகளின் கப்பல் இந்தியக் கடற்படையால் கைப்பற்றப்பட்டதாக வெளிவரும் செய்திகளும், தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்படுகின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றன.

நான் இப்படிக் குறிப்பிடுவதன் அர்த்தம் இந்தியா தமிழீழத்திற்கு நிரந்தர எதிரி நாடாக அமைந்துவிடும் என்பது அல்ல என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியது.

www.tamilarangam.net

இந்திய நலன்களும், தமிழீழத்தின் நலன்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாக அமையும் போது இன்று இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான கசப்புணர்வு விலகிவிடலாம். அரசியல் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் இது கூட சாத்தியமான விடயமே.

## ஸ்ரீலங்கா - தமிழீழம் - இந்தியா

ஸ்ரீலங்கா, தமிழீழம், இந்தியா ஆகிய சக்திகளிடையே இன்று நிலவும் முரண்பாடுகள் குறித்து சுருக்கமாக நோக்கினோம்.

இம் மூன்று சக்திகளில் இரண்டு இணையுமாக இருந்தால் தென்னாசிய பிராந்திய அரசியலின் மூன்றாவதினை ஓரங்கட்டி விடமுடியும் என முன்வைக்கப்படும் கருத்தும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடியதே.

ஆனால், தமிழீழம் -ஸ்ரீலங்கா ஆகிய இரு சக்திகளுக்கிடையேயான முரண்பாடு அடிப்படை மனித உரிமையுடனும், அரசியல் உரிமையுடனும் தொடர்பு பட்டது.

மேலும், எந்த நாட்டு இராணுவமாக இருந்தாலும் அதனால் தோற்கடிக்கமுடியாத அளவுக்கு தமிழீழம் நிமிர்ந்து நிற்கின்றது.

**இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கப் போக்கு, தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவே மிக மோசமாகத் தாக்குதலுக்குள்ளானது.**

**தென்னாசியப் பிராந்தியத்தின் எட்டாவது நாட்டுக்குரிய அரசியல் இராணுவ வலுநிலையினைத் தமிழீழம் பெற்று வருகின்றது.**

இதனால் இலங்கையின் இனப் பிரச்சனைக்கு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அரசியல் தீர்வே நிரந்தரத் தீர்வாக அமையமுடியும்.

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையினை சிங்கள பௌத்த இனவாதம் அங்கீகரிக்குமா? தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணய உரிமையினைப் பெறுவதனை இந்திய ஆளும்வர்க்கம் ஜீரணிக்குமா?

இக்கேள்வியின் விடையிலேயே, இலங்கையின் இனப் பிரச்சனைக்கான தீர்வும் தென்னாசியப் பிராந்தியத்தின் எதிர்கால அரசியல் போக்கும் தங்கியுள்ளது. ■

| | |
|---|---|
| முன் அட்டைப்படம்: | தமிழீழ காவற் துறையின் அணிவகுப்பை ஏற்கும் தலைவர் பிரபாகரனும் காவற்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசனும். |
| பின் அட்டைப்படம்: | தமிழீழ காவற்துறையினரின் அணிவகுப்பை தலைவர் பிரபாகரனும் திரு. நடேசனும் பார்வையிடுகின்றனர். |

# ஸ்ரீ லங்காவின் போர்த் திட்டமும் தொண்டமானின் தீர்வுத் திட்டமும்

ஸ்ரீலங்கா அமைச்சர் தொண்டமானின் திட்டம் குறித்து, பெரும் ஆரவாரம் செய்யப்படுகின்றது. தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்கின்ற சிறந்த திட்டமாக தமிழ் மக்கள் முன் வைக்கப்படுகின்றது. ஈழம் என்ற பெயரைத் தவிர அனைத்தும் அதில் அடங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையைப் பூர்த்தி செய்வதாகவும் இது வர்ணிக்கப்பட்டுள்ளது. இக்கருத்து தமிழீழ மக்களிடையே பரவி வருவதும், அப்படி பரப்பப்படுவதற்கு தமிழ் மக்களிடையே உள்ள சில செய்தி நிறுவனங்கள் உதவி வருவதுமே இங்கு நாம் கவனிக்கவேண்டியதாகும். தொண்டமானின் திட்டத்தின் பின்னால் உள்ள அரசின் சூழ்ச்சித் திட்டம் குறித்து நாம் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்.

தொண்டமான் நீண்ட காலமாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களுடன் மிகவும் நெருங்கியவர் என்பதும், அரசாங்கத்தில் ஓர் அமைச்சர் என்பதும் அனைவரும் அறிந்த விடயம். இது தொண்டமானின் திட்டம் என்றும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் திட்டம் என்றுமே அடித்துக் கூறப்படுகிறது. ஆயினும் இது அரசாங்கத்தினால் வரையப்பட்டு தொண்டமானுக்கூடாக வழங்கப்படுகின்றது என்பதே உண்மையாகும். அரசாங்கத்தினால் வரையப்பட்டாலும் அது அரசாங்கத்தின் திட்டம் அல்ல; அதற்கு அரசாங்கம் பொறுப்பாளியுமல்ல. இத்திட்டம் மாகாண சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படுவது பற்றியே பேசுகின்றது. தொண்டமான் சமர்பித்துள்ள திட்டம் மாகாணசபைக்கு கூடுதலான அதிகாரங்கள் பற்றிக் கூறும் போது, தொண்டமான், அவை குறித்து பத்திரிகைகளுக்கு கொடுக்கும் விளக்கங்களோ ஆகாயத்தை தொடுபனவாக இருக்கின்றன. இவ்விளக்கங்களே தொண்டமான் திட்டத்தை பிரமாண்டமானதாக்கி விடுகின்றன. மாகாணசபைக்கு கூடுதலான அதிகாரங்கள் பற்றிய தொண்டமானின் திட்டம் தொடர்பாகவும், தொண்டமானின் பத்திரிகை விளக்கங்கள் தொடர்பாகவும் சிங்கள இனவாதிகள் செய்கின்ற விஷமப் பிரச்சாரங்கள், இனவாத முழக்கங்கள் தொண்டமானின் திட்டத்தை விஸ்வரூபப் படுத்தி விடுகின்றன. தொண்டமானின் திட்டத்தை பெரிதுபடுத்தி, அருமையான திட்டமாகக் காட்ட முற்படும் வேலையை ஸ்ரீலங்கா அரசாங்கமே மிகவும் சாதுரியமான முறையில், நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. சிங்களச் சமூகத்திலும், எதிர்க்கட்சிகளிலும், அரசாங்கக் கட்சிகளிலும் உள்ள இனவாதிகளின் எதிர்ப்பு, ஒரு திட்டமிட்ட நடவடிக்கையின் இயற்கையான விளைவேயாகும். மாகாணசபையைக் கூட தமிழ்மக்களுக்கு வழங்க சிங்கள இனவாதிகள் தயாராக இல்லை என்பதும் இங்கு உணரக் கூடிய உண்மையாகும்.



**இது தொண்டமானின் திட்டம் என்றும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் திட்டம் என்றுமே அடித்துக் கூறப்படுகின்றது. ஆயினும் இது அரசாங்கத்தினால் வரையப்பட்டு தொண்டமானுக்கூடாக வழங்கப்படுகின்றது என்பதே உண்மையாகும்.**



தொண்டமானின் திட்டம் தமிழீழ மக்களின் அபிலாஷைகளை சிறிதளவேனும் பூர்த்தி செய்யாது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தற்போதுள்ள மாகாண சபை அதிகாரங்களுக்கு மேலாக, தொண்டமான் கூறுவது போல் கூடுதல் அதிகாரங்களைப் பெறலாம் என்பதே நடக்கக்கூடிய செயல் அல்ல. தற்போதுள்ள மாகாணசபைக்கு கொடுக்கப்பட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


டுள்ள அதிகாரங்களே, ஸ்ரீலங்கா அரசின் ஒற்றையாட்சி யாப்பினுள் பெறக்கூடிய அதிஉச்ச அதிகாரங்களாகும். இதற்குமேல் அதிகாரங்களை அதிகரிப்பதானால், ஒற்றையாட்சி முறையின் வடிவம் நீங்கி சமஷ்டி வடிவத்தைப் பெற்றுவிடும். இவ்வாறு சமஷ்டி வடிவம் பெறாதவாறு, ஸ்ரீலங்கா யாப்பு வரையப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றுவதாயின் நாடாளுமன்றத்தின் 2/3 பங்கு பெரும்பான்மையால் அவ்வரசியல் யாப்புத் திருத்தம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெறல்வேண்டும். ஒற்றையாட்சி முறையினுள் சில அதிகாரங்கள் கூட்டப்படலாம் ஆயினும், முழுமையான நிர்வாக அதிகாரம் சிங்கள ஜனாதிபதியிடமே இருக்கும். எனவே விரும்பிய போது மாகாணசபைக்கான அதிகாரங்களை வழங்கவோ, மீள எடுக்கவோ அதிகாரம் உடையவராய் அவர் இருப்பார். மாகாணசபையையே விரும்பிய போது கலைத்து விடலாம். சிங்கள நாடாளுமன்றமும், மாகாணசபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை மறுதலிக்கும் சட்டங்களை இயற்றலாம். மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் ஒரு மாநகரசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை விட மேலானவையல்ல.

**மதி**

www.tamilarangam.net

எதிர்க்கட்சிகளும், சிங்கள மக்களும் அரசாங்கத்துடன் இணைந்து, இவ்வொற்றையாட்சி அமைப்பை சமஷ்டி ஆட்சிக்கு மாற்றுவார்கள் என்பதிலும் நம்பிக்கையில்லை. ஒன்றோ, இரண்டோ குட்டிக் கட்சிகளைத் தவிர எந்தச் சிங்களக் கட்சியும் இப்போதுள்ள மாகாணசபையே அதிகம் என்று கருதும் நிலையே காணப்படுகின்றது. அரசாங்கத்திலும் அத்தகைய போக்கே கூடுதலாக உள்ளது. ஒற்றையாட்சியினுள் அதிகாரங்களைக் கூட்டுவது என்ற பேச்சுக்கே, தமிழ் இரத்தத்தை ஆறாக ஓடவைக்க இனவாதப் பிரச்சாரங்கள் புத்த பிக்குகளினாலும், அரசியல்வாதிகளினாலும் நடாத்தப்பட்டு வருகின்றன.


நன்றி ஐலண்ட்




தொண்டமானின் இந்த மாகாண சபைத்திட்டத்தை விடுதலைப் புலிகள் தொடக்கப் புள்ளியாக ஏற்றுக்கொண்டு பேச வருகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த நிலையில், இந்த மாகாணசபைத் திட்டத்தை தரம் இறக்க மேலும் இரண்டு அமைப்புக்களை அரசாங்கம் உருவாக்கி வைத்துள்ளது. ஒன்று சர்வகட்சி மாநாடு மற்றது நாடாளுமன்றத் தெரிவுக் குழு. இவ்விரண்டும், சிங்கள மேலாதிக்க வாதிகளாலும், தமிழ்த் துரோகக் குழுக்களாலும் நிரம்பியுள்ள அமைப்புக்களாகும். தமிழ் மக்களுக்கு எவ்வித அரசியல் அதிகாரமும் கொடுக்காத பழியை தான் மட்டும் ஏற்றுக்கொள்ளாமல், அனைவரையும் கூட்டுச் சேர்த்து ஆற்றுவதற்காகவே அவ்விரு அமைப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இறுதியில் ஒற்றையாட்சி முறையினுள் மாகாணசபைக்கு கூடுதல், குறைவான அதிகாரங்கள் என்பவற்றுக்கிடையே சமரசம் காணும் முயற்சியாகவே தொண்டமானின் திட்டம் அமையும். சிங்கள ஜனாதிபதியையும், சிங்களப் பெரும்பான்மை நாடாளுமன்றத்தையும் உடையதாயும் அரசியல் அதிகாரம் அவ்விரு ஸ்தாபனங்களிடமே முழுமையாக நிறைந்துள்ளதுமான ஒற்றையாட்சி முறையினுள் காணப்படும் தீர்வு, தமிழ் மக்களை நிரந்தரமாக சிங்கள மேலாதிக்கத்திற்கு உட்படுத்துவதாகவே இருக்கும். தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை சுதந்திரத் தமிழீழத்தில்தான் முழுமையாக அடைய முடியும் என்று தமிழீழ மக்கள் போராடி வருகின்றார்கள். ஒரு மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒற்றையாட்சி அமைப்பினுள் நிலைநாட்ட முடியாது என்பது தெளிவான உண்மையாக இருந்தபோதிலும், அதனையே வலிந்து திணிக்க ஸ்ரீலங்கா அரசு முனைகின்றது. அதனை நியாயயப்படுத்த சில தமிழ்ப் பத்திரிகைகளும் முயலுகின்றன. அதற்கடுத்ததாக வைக்க சமஷ்டித் திட்டமோ, எந்தத் திட்டமோ ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் இல்லை. இவ்வாறு ஸ்ரீலங்கா அரசு சரியான மாற்றுத் திட்டத்தை வைக்கமுடியாத நிலைமை சர்வதேசச் சட்டங்களின் பிரகாரம் தனித் தமிழீழம் அமைக்கக்கூடிய சட்ட அந்தஸ்தை விடுதலைப் போராட்டத்திற்கு அளிக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- கஜன் -

இரவுத் தூங்கங்களும்
காலை விழிப்புகளும்
நிச்சயமற்றுப்போன தேசம்.

புழுக்கம்
போர்வையாகிப்போன
ஒரு கோடை இரவு
நிலவுக்குப் பயந்து
எங்கும் கறுப்பாய் மை பூசிக்கொள்ளும்.

என்றோ ஒரு நாள் ஷெல் உரசி
கூரை சிதைந்த வீட்டினுள்
வானில் தூர மின்னுமோர்
ஒற்றை நட்சத்திரம்
எட்டிப்பார்க்கும் வெறுந்தரையில்
தூங்காமல் கண்மூடி
இமை கனக்க
உறங்காத சயனத்தில் சலிப்புவரும்.

எங்கோ ஓர் சாமக்கோழி
கூவும் சத்தம்
காற்றில் மிதந்து
காதில் கரையும்.

தூக்கம் கலைந்து சிணுங்கும்
குழந்தையை அணைத்த மனைவி
திட்டித் தீர்த்து
பிடிசாபம் போட்டாள்
எரிய மறுக்கும் குப்பிவிளக்குக்கும்
இல்லாத எண்ணைக்குமாய்.

காதுகளைக் காயப்படுத்தி
இதயம் உறைந்துபோக
மனித இரைதேடிப்பறக்கும்
தகரப்பறவை
இரவின் அமைதியை
சிதைக்கும் சத்தத்தில்
விழிப்புக்களும்
உயிர்ப்பின் இயக்கங்களும்
அவசரத்தில் மூச்சிரைக்கும்.

கால்கள்
கட்டளை இல்லாமலேயே
பதுங்குகுழி நோக்கி
பந்தயம் நடத்தும்.

வட்டமிடும் பருந்து கண்டு
தாய்க்கோழி இறக்கையுள்
ஒடுங்கிடும் குஞ்சுபோல்
நெஞ்சணைத்த என் மழலை
வீரிட்டு பயந்து அழும்.

அண்ணாந்து வானம் பார்த்தேன்,
விடிகாலை சாட்சியமாய்
அந்த ஒற்றை நட்சத்திரம்
இன்னும்
அண்மையில் தெரிந்தது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilnation.net

**தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவரும் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைவருமான கோ. மகேந்திரராஜா (மாத்தையா) "உதயன்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி.**

**கேள்வி:**

1987ம் ஆண்டு நடைபெற்ற விடுதலைப் புலிகளின் இந்தியாவுடனான போர் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை பின்னடையச் செய்ததாகக் கூறப்படுகிறது. அதே போன்ற நிலை இப்பொழுதும் ஏற்பட்டுள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா? இந்தியாவில் தமிழ்நாடு அரசும், மத்திய அரசாங்கமும் ஈழப்போராட்டத்தை அடக்குவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ராஜீவ் காந்தியின் கொலை விடுதலைப் புலிகளுக்கெதிரான பிரச்சாரமாக கையாளப்படுகின்றது. ஆனையிறவு மோதலின் விளைவும் பொருளாதார தடைகளும் சுதந்திரப் போராட்டத்தை பின்னடையச் செய்துள்ளதா?

**பதில்:**

'பின்னடைவு' எனும் பதத்திலும் பார்க்க 'நெருக்கடி' எனும் சொல் தற்போதைய நிலைக்குப் பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

எமது போராட்டப் பாதையில் இதைப் போன்ற நெருக்கடிகளை பல தடவை சந்தித்துள்ளோம். சுதந்திரப் போராட்டங்களில் இதுபோன்ற நிலைகள் ஏற்படுவது ஒன்றும் ஆச்சரியப் பட வேண்டிய விடயம் அல்ல. சுதந்திரத்தை விரும்பும் மக்கள் இவைகளுக்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையே நடைபெற்ற போரினால் விடுதலைப் போராட்டம் பின்னடைந்ததெனக் கூறுவது தவறானது.

இந்தியாவின் தலையீடு சரித்திரச் சந்தர்ப்பங்கள் சிலவற்றினால் ஏற்பட்டது. அவர்கள் எம் மீது திணித்தது ஆக்கிரமிப்புப் போர்.

இந்தியாவின் பூகோள ரீதியான நலன்களுக்கும் தமிழீழ மக்களின் அபிலாசைகளுக்கும் இடையே ஏற்பட்ட பெரும் வித்தியாசங்களால் இந்த யுத்தம் ஏற்பட்டது. ஈழத் தமிழ் மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாக்கவே நாம் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடினோம்.

இந்தப் போரை தவிர்த்திருக்க வேண்டுமென சிலர் கூறலாம். இதைத் தவிர்த்திருந்தால் எமது மக்களின் நலன்களை இந்தியாவின் பிராந்திய ஏகாதிபத்தியத்திற்கு அடகு வைக்கும் நிலை ஏற்பட்டிருக்கும். அப்படி நாம் செய்திருந்தால் அது எமது மக்களுக்கு நாம் செய்த பெரும் துரோகமாகும்.

பெருந்தொகையான உயிர் இழப்புக்களும், பொருள் அழிவுகளும் ஏற்பட்டது உண்மை. அப்படியிருந்தும் எமது விடுதலைப் போராட்டம் பின்னடைந்ததெனக் கூறமுடியாது. இந்திய இராணுவத்தின் அத்துமீறிய தலையீட்டினால் எமக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது. நாம் எமது மக்களின் நலன்களைப் பாதுகாத்தோம். அதற்காக பெருமளவு இரத்தத்தைச் சிந்தினோம். அதில் வெற்றியும் கண்டோம்.

இந்திய சரித்திராசிரியர்கள் இந்த யுத்தம் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பல பின்னடைவுகளை ஏற்படுத்தியதெனக் கூறுகின்றனர். இந்திய ஆளும் வர்க்கத்தினர் இந்த உண்மையை புரிந்துகொள்ளல் வேண்டும். ஆனபடியால் இந்த யுத்தமானது எமது தேசிய எழுச்சிக்கு பின்னடைவு ஏற்படுத்தியதெனக் கூறுவதை விட இந்திய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு பின்னடைவு ஏற்படுத்தியதென கூற வேண்டும். இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு எமது சுயநிர்ணய உரிமைகளுக்கு புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்து உதவியுள்ளது. இதனால் எமது போராட்டம் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்துள்ளது.

நீண்டகாலமாக பற்பல வடிவங்களில் பல தரப்பட்ட நெருக்கடியான நிலைகளை நாம் சந்தித்துள்ளோம். இவைகளுக்கு முகம் கொடுக்காமல் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாது. வெளியரங்கில் எமக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதால் எமது போராட்டம் பின்தள்ளப்பட்டுள்ளதெனக் கூறுவது தவறானது. போராட்டங்கள் விரிவடைந்து முதிர்ச்சி பெறும்போது நெருக்கடிகளும் அதிகரிப்பது சகஜம்.

தற்போது நாங்கள் பலதரப்பட்ட அழுத்தங்களுக்கு உள்ளாகிறோம் என்பது உண்மை. இந்

திய அரசாங்கமும், தமிழ்நாடு அரசும் ஒன்று சேர்ந்து எம்மை நசுக்குவதற்கான நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளன. நீங்கள் சொன்னதைப் போல் ராஜீவ் காந்தியின் கொலை எமக்கெதி ரான பிரச்சார ஆயுதமாகப் பாவிக்கப்படுகிறது. இதேவேளை சிங்கள அரசாங்கமும் எமக்கெதி ரான இராணுவத் தாக்குதல்களையும் பொரு ளாதாரத் தடைகளையும் அதிகரித்துள்ளது.

இந்தியாவின் நிலைப்பாடு எங்களுக்கு ஆச்சரி யத்தைத் தரவில்லை. எமது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இந்திய ஆளும் வர்க் கத்தினர் ஆரம்பகாலம் முதல் செயல்பட்டு வந்ததை எமது மக்கள் நன்றாக அறிவார்கள்.

எமது விடுதலைப் போராட்டம் இந்தியாவின், தேசிய, பிராந்திய நன்மைகளைப் பாதிக்கும் என அவர்கள் தவறான எண்ணம் கொண்டுள் ளனர். இந்தக் காரணத்திற்காகவே இந்தியா காலத்திற்குக் காலம் எமது போராட்டத்தை நசுக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்தியாவிலும் சுயாட்சிக்கெதிராக இந்திய ஆளும் வர்க்கத்தினர் செயல்பட்டு வருகிறார் கள். சுயாட்சி வழங்குவதால் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் பங்கம் ஏற்படுமென அவர்கள் கருதுகின்றனர். அயல் நாடான ஸ்ரீலங்காவிலும் இதே நிலையை திணிக்க முயற்சிக்கின்றனர். இதனாலேயே நாம் இந்தியாவுடன் முட்டி மோதிக்கொண்டிருக் கிறோம்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணயப் போராட்டமானது தமிழ் நாட்டிலும் தேசிய உணர்வுகளைத் தூண்டிவிட்டு பிரிவினைக்கு வழிவகுத்துவிடு மெனப் பயப்படுகின்றனர். இவர்களின் இந்த ஆதாரமற்ற பயத்தினால் நாம் எவ்வளவோ பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள் ளது.

1983ம் ஆண்டு தொடங்கிய இந்தியத் தலையீடு விஸ்வரூபம் எடுத்துள்ளது. விபரமாக இந்த நீண்ட குழப்பமான நிகழ்ச்சிகளை எடுத்து ரைக்க நேரம் போதாமல் உள்ளது.

வீரத்துடனும், தீர்க்கதரிசனத்துடனும், திடத்து டனும் சுயநிர்ணயப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களிடையே வளரச் செய்து பலம் வாய்ந்த போராளிக் குழுவாய் வளர்ந்துள் ளதை அழிப்பதற்கு இந்திய ஏகாதிபத்தியம் ஆரம்பம் முதல் இன்றுவரை பகீரதப் பிரயத்த னம் செய்துகொண்டே வருகிறது. இதன் தொடர்ச்சியே அவர்கள் தமிழ் நாட்டில் விடுத லைப் புலிகளுக்கு எதிராக எடுத்துவரும் நட வடிக்கை.

ராஜீவ் காந்தியின் கொலை விடுதலைப் புலி களுக்கெதிரான பிரச்சாரத்தில் ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகளுக்கெ திரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இந்திய ஆளும் வர்க்கத்தினருக்கு விடுதலைப் புலிக ளையும் தமிழ்நாட்டு மக்களையும் பிரிப்பதற்கு ராஜீவ் காந்தியின் கொலை ஒரு வரப்பிரசாத மாக அமைந்தது. தமிழ் நாட்டில் ஏற்பட்ட ஒவ் வொரு வன்முறைக்கும் விடுதலைப் புலிகளே காரணம் எனக் கூறிவந்த அரசியல் வாதிகள் சிலரும், சில பத்திரிகைகளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு சிறு தயக்கமும் இல்லாமல் விடுதலைப் புலிகளே ராஜீவ் காந்தியைக் கொலை செய்தார்கள் எனக் குற்றம் சாட்டினார் கள்.

பல காலமாக தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் பலர் விடுதலைப் புலிகளை பகடைக் காய்க ளாகவே பயன்படுத்தி வந்துள்ளனர். அவர்க ளிடையே ஏற்படும் பதவி மோதல்களில் விடு தலைப் புலிகளை பலிகடாவாகப் பாவித்தனர்.

கருணாநிதியின் ஆட்சியில் தொடங்கிய புலி வேட்டை இப்பொழுது அப்பாவி அகதிகளைப் பாதிக்கும் அளவிற்கு வந்துள்ளது. இவைகளின் பின்னணியில் இருப்பவர்கள் புது டில்லியில் உள்ள ஆட்சியாளர்களே. தமிழ்நாட்டில் நடை பெறும் அரசியல் நாடகத்தின் சூத்திரதாரிகள் அவர்களே. அவர்களுடைய ரகசியத் திட்டம், எந்த வழியைப் பாவித்தும் விடுதலைப் புலி களை அடக்கிவிட வேண்டும் என்பதே.

இந்தியாவில் இப்பொழுது தலை தூக்கியுள்ள விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகள் அப்படியொன்றும் புதியன அல்ல. ஈழத் தமிழர் களின் சுயநிர்ணய உரிமையை நசுக்க வேண்டு மென்ற இந்தியாவின் முன்னைய வெளிநாட்டுக் கொள்கையின் மறு அவதாரம் என்றே கூறவே ண்டும்.

விடுதலைப் புலிகளின் போராட்ட முன்னேற்றங் களும் சர்வதேச அரங்கில் அவர்களுக்கு வளர்ந்து வரும் ஆதரவும் இந்தியாவை கிலி கொள்ளச் செய்துள்ளது. இதனால் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு அவர்கள் எடுக்கும் முயற்சி ஆச்சரியத்திற்கு இடம் அளிக்க வில்லை.

இந்தியாவின் நிலைப்பாடோ அல்லது இப்போ முது ஏற்பட்டுள்ள போர் நிலைமையோ எமது போராட்டத்தை பின்னடையச் செய்துவிட்ட தெனக் கூறமுடியாது. இந்தியா தமது பழைய கொள்கைகளையே தொடர்கின்றது என தெளி வாகியுள்ளது.

ஸ்ரீலங்காவில் மறுபடியும் நேரடியாக தலையிட முடியாத படியால் தமிழ்நாட்டில் ஒரு இரும்புத் திரையை கட்டியெழுப்ப முனைகின்றனர். தமிழ் நாட்டு மக்களின் ஆதரவும், அனுதாபமும் எமக் கிருக்கும் வரை இந்த இரும்புத் திரை எமக்கு தடையாக இருக்கப் போவதில்லை.

தமிழீழத்தில் இப்பொழுதுள்ள யுத்த நிலைப்பாடு எமக்குப் பாதகமாக இல்லை. பெரிய அளவி லான இராணுவத் தாக்குதல்களையும் நேருக்கு நேர் நின்று போரிடும் திறமை எமக்குண்டு என ஆனையிறவில் நிரூபித்துவிட்டோம். எமது இராணுவத் திறமையை இது எடுத்துக் காட்டி யுள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்ட யுத்த தந்திரங் களைப் பிரயோகித்து சுற்றிவளைப்பு நடவடிக் கைகளைத் தளர்த்தினோம். ஆனால் யுத்தம் இன்னமும் முடிவடையவில்லை. எமது எதிரி கள் அவர்களுடைய சவக்குழியில் அவர்களு டைய கொடியை ஏற்றியுள்ளனர் அவ்வளவு தான்.

www.tamilarangam.net

இந்திய மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளும் தமிழ்நாடு அரசின் நிலைப்பாடும், எமது மண் ணில் நடைபெறும் யுத்தமும், பொருளாதாரத் தடையும் எமது அமைப்பையும், எங்களது மக் களையும் பெருமளவில் பாதிப்புக்குள்ளாக்கியுள் ளது. ஆனால், இந்தப் பாதிப்புக்கள் எங்களு டைய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல புதிய தெம்பைக் கொடுத்துள்ளது. இதனால் எமது இரு கால்களில், எமது மண்ணில் நின்று, எமது சொந்தப் பலத்தைப் பாவித்து நாம் போரிட வேண்டுமென்ற உண்மையை எங்களுக்கு உணர்த்தியுள்ளது. எப்பேற்பட்ட நெருக்கடிகள் வந்தாலும், வீரமும், திடமும், நம்பிக்கையும் எமக்குள்ள வரை உலகில் எந்தச் சக்தியாலும் எம்மை அழித்துவிட முடியாது.

**கேள்வி:**

இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு முடியா தென்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒற்றுமை காணப்பட்ட அரசியல் தீர்வு ஒன்றே சிறந்த வழி என அரசாங்கம் கூறுகின்றது. உங்களது அமைப்பின் நிலைப்பாடு என்னவெனக் கூறமு டியுமா?

**பதில்:**

இது சிங்கள அரசாங்கம் வெகுகாலமாகக் கூறிவரும் அரசியல் பிரசங்கமாகும்.

போதனையில் அகிம்சையும் நடைமுறையில் பலாத்காரமும் பாவித்து சிங்கள அரசாட்சியா ளர்கள் தமிழ் இனத்தை 40 ஆண்டுகளுக்கு மேலாக ஏமாற்றி வருகிறார்கள். இன்றைக்குக் கூட சமாதானம் பேசிக் கொண்டு இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

ஆயுதப் பிரயோகத்தை எடுத்து நோக்கும்பொ ழுது சிங்கள அரசாங்கத்தின் இராணுவ அடக் குமுறைக்கும், விடுதலைப் புலிகளின் சுதந்திரப் போராட்டத்திற்குமுள்ள வித்தியாசத்தை அறிய வேண்டியது அவசியம். அடக்குமுறையாளரின் இராணுவ அடக்குமுறைக்கும் அடக்கியொடுக் கப்படும் மக்களின் விடுதலைப் போராட்டத்திற் கும் அடிப்படையில் வித்தியாசம் உண்டு. இர ண்டையும் ஒப்பிட்டுப் பேசுவதே தவறானது.



அடக்கு முறையாளர்களின் இராணுவம் அநீதியின் கருவி. மக்களை அடக்குவதற்கும், ஒடுக்குவதற்கும், அழிப்பதற்கும் பாவிக்கப்படுவன. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவம் அழிப்பு வேலைகளுக்கே பாவிக்கப்படுகின்றன. தமிழ் இனத்தை முற்றாக அழித்துவிடவே இவை உபயோகிக்கப்படுகின்றன.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் அநீதிக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். நீதிக்காக போராடுகின்றனர். மக்களின் விடுதலை, நியாயம் என்னும் அடிப்படையில் அமைந்துள்ளது விடுதலைப் புலிகளின் போராட்டம். ஆனபடியால், விடுதலைப் புலிகளின் போராட்டம் அடிப்படையில் ஒரு முன்னேற்றப் பாதையில் செல்வதாக அமைந்துள்ளது.


சிங்கள இராணுவம் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமிப்பதிலும், அழிப்பதிலுமான யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இராணுவம் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்கும் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கும் போராடுகின்றது. இதனால் இலட்சியத்திலும், நிலைப்பாட்டிலும் இரண்டும் வேறுபட்டுக் காணப்படும். இரண்டு பகுதியினருமே ஆயுத பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறுவது உண்மைக்கு முரணானது.

சிங்கள அரசின் இராணுவத்தின் அடக்கு முறைகளை எதிர்த்து தமிழ் ஈழ மக்கள் எவ்வளவோ காலமாக சமாதான முறைகளிலும் அகிம்சா முறைகளிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இப்படியான ஆர்ப்பாட்டங்கள் யாவும் ஆயுத பலத்தால் முறியடிக்கப்பட்டன. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்கள் மீது அரசின் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இச் சூழ்நிலையில் ஆயுதம் ஏந்தி எம்மைப் பாதுகாத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியேதும் எங்களுக்கு இருக்கவில்லை.

அரசின் பயங்கரவாதமே தமிழர்கள் ஆயுதமேந்த வழி வகுத்தது. அரசியல் குறிக்கோளை நோக்கியே நாம் இந்த ஆயுதப் போராட்டத்தை நடத்துகின்றோம். ஆனபடியால் எமது போராட்டத்தை அரசியல் போராட்டமாகவே யாவரும் கருதவேண்டும்.

எமது மக்கள் சமாதானமாகவும், பாதுகாப்பாகவும், தன்மானத்துடனும், சகல மனித உரிமைகளுடனும் அரசியல் சுதந்திரத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

www.tamilarangam.net



நாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்ல. யுத்தத்தால் சிதறுபட்டுள்ள எங்கள் தாய் நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஏற்படவே நாம் போராடுகின்றோம். ஆயுதப் போராட்டப் பாதையில் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட நாங்கள், சமாதான வழிமுறைகளை எப்பொழுதேனும் நிராகரித்தவர்களல்ல. சமாதானமான பேச்சுவார்த்தைகள் மூலம் எமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை நாங்கள் எப்பொழுதும் உதறித் தள்ளவில்லை.

www.tamilarangam.net

யுத்த நிறுத்தத்தை எத்தனையோ முறை பிரகடனப்படுத்தினோம். பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டோம். நிரந்தரத் தீர்வு காண்பதற்கு எவ்வளவோ விட்டும் கொடுத்தோம். ஆனால், சிங்கள அரசாட்சியாளர்கள் சமாதான அணுகுமுறைகளை விரும்புகிறார்கள் இல்லை. தமிழர்களின் தேசியப் பிரச்சனைக்கு சமாதானமான வழிகளில் தீர்வு காண்பதில் அவர்களுக்கு அக்கறை இல்லை.

சிங்கள அரசாங்கம் இராணுவத் தீர்வையே நாடுகின்றது. தமிழ் நிலங்களை ஆக்கிரமித்து, அப்பகுதிகளில் நிலைகொண்டு இராணுவ பலத்தால் தமிழர்களை அடக்கி ஆள்வதையே சிங்கள அரசாங்கம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆரம்ப காலம் முதல் இன்றைய வரைக்கும் இந்த அர்த்தமற்ற கொள்கையையே சிங்கள அரசும் கடைப்பிடித்து வருகின்றது. இனத்துவேஷ அடிப்படையிலான இந்த இராணுவ அணுகுமுறையை அவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை.

ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களின் இராணுவ பெரும் படைகளுக்குச் சவால் விடக்கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகளின் படைப்பலம் வளர்ந்துள்ளது. ஆக்கிரமிப்புக் கொள்கை வெற்றி பெறமாட்டாது என்னும் உண்மையை ஸ்ரீலங்கா அரசுக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது, விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கைகளும். ஆனாலும் சிங்கள ஆட்சியாளர்கள் இந்த உண்மை நிலையை உணர்வதாக இல்லை.

இந்த நிலையில் எங்களால் வேறு என்ன செய்ய முடியும்? இராணுவ அடக்கு முறையை மாத்திரம் கொள்கையாகக் கொண்டுள்ள எதிரியிடம் எவ்வாறு முகம் கொடுக்க முடியும்? மனித உரிமைகள், நீதி, சமத்துவம், நியாயம் முதலியவற்றை துச்சமாக மதிக்கும் கூட்டத்தாரிடம் எங்களால் என்ன செய்ய முடியும்? இன அழிப்பையே குறிக்கோளாகக் கொண்டுள்ள இனத்துவேஷ பிசாசு போன்றோருடன் எப்படி தீர்வு காணமுடியும்?

எமது குறிக்கோளை அடைய வீரத்துடனும், திடத்துடனும், நம்பிக்கையுடனும் போராட்டத்தைத் தொடர்வதை தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. பலம் வாய்ந்த இராணுவத்துடன் போரிடுவதற்கு நாமும் பலமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். நாங்கள் ஈடுபட்டுள்ள போராட்டத்தின் முடிவை பலமே முடிவு செய்யும்.

எமது எதிரியின் சவாலை முறியடித்து எமது விடுதலைக் குறிக்கோளை அடைய வேண்டுமானால் நாம் எமது போராளிகளின் எண்ணிக்கையையும் எமது ஆயுத பலத்தையும் அதிகரிக்க வேண்டும்.

விடுதலை இயக்கங்களுக்கு பலத்தை அளிப்பது மக்களின் சக்தியே. மக்களின் சக்தி தேசிய சக்தியாக மாறி எமது விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக நின்றால் மட்டுமே நாமும் வீரம் செறிந்த இராணுவமாக மாறமுடியும்.

தமிழீழ மக்களுக்கு எந்த விதமான நீதியையும் இனவாத சிங்கள அரசாங்கம் கொடுக்கமாட்டாதென்பதை சர்வதே சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுவதற்கே நாம் பேச்சுவார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளோம்.

சமஷ்டி அடிப்படையிலான சுயாட்சியை ஆக்கபூர்வமான பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக நாம் தெட்டத் தெளிவாக அறிவித்துள்ளோம். ஆனால், இந்த அறிவித்தலை சிங்கள அரசு சிந்தித்துப் பார்த்ததாகக் கூடத் தெரியவில்லை. இது எங்களுக்கு ஆச்சரியத்தை கொடுக்கவில்லை. இந்த அரசியல் குளறுபடியை எமது மக்கள் அவர்களின் நீண்டகால சரித்திர அனுபவங்களில் இருந்தே அறிந்துள்ளனர்.

தமிழ் ஈழத்தையும் சமஷ்டியையும் விலக்கிக் கொள்வோம். ஆனால், சிங்கள அரசாங்கம் தமிழர்களுக்கு பிரச்சினை இருப்பதாகவே ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

தமிழ் மக்கள் ஒரு தனி இனம் என்பதையே ஏற்க மறுக்கிறது. இவர்களுக்கு சரித்திர பூர்வமான பாரம்பரிய பிரதேசம் இருப்பதையும், இவர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டென்பதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

நாங்கள் போராட்டத்தைத் தொடரும் அதே வேளை சமாதானத்திற்கான கதவுகளைப் பூட்ட மாட்டோம். எமது பலம் ஒன்றுதான் யுத்தத்தையோ சமாதானத்தையோ தீர்மானிக்கும்.

**கேள்வி:**

அரசாங்கம் பேச்சு வார்த்தைகளுக்கு உடன்பட்டாலும் தமிழீழம் உருவாகுவதை அனுமதிக்க மாட்டாது; அந்த நிலையில் தமிழீழத்திற்குக் குறைவான தீர்வொன்றினை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? அல்லது உங்களுடைய இலட்

சியத்தை அடைய கடைசிவரை போராடிக் கொண்டே இருப்பீர்களா?

www.tamilarangam.net

**பதில்:**

தமிழர்களுடைய பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு தரக்கூடியது சுதந்திரமான தமிழீழம் ஒன்றே தான் என்பதை நாம் திடமாக நம்புகி றோம். இது எங்களுடைய அரசியல் குறிக் கோள். இந்த அரசியல் குறிக்கோளை அடை வதற்காகவே நாம் போராட்டத்தில் ஈடுபட்டுள் ளோம். இதே நேரம் சர்வதேச சமுதாயம் தனிநாடான தமிழீழத்தைத் தவிர்த்து சுயாட்சி யுடனான மாற்றுத் திட்டத்தை பரிசீலனை செய் யும்படி கேட்கின்றனர். இவர்கள் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு அரசியல் தீர் வைக்காண முயற்சிக்கும்படியும் கேட்டு வருகி றார்கள். அதனால்தான் நாங்கள் பேச்சு வார்த் தைகளுக்கு ஆயத்தமாக இருக்கிறோம்.

சிங்கள அரசாங்கம் சுதந்திர தேசமான தமிழீ ழம் உதயமாவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். இது பேரம் பேசும் விஷயமல்ல. இந்த இலட்சியத்தை அடைய வேண்டுமானால் போராட்டம் தான் ஒரே வழி. இதே நேரம் ஓரளவு சுயாட்சியுடன் கூடிய மாற்றுத் திட்டத் தையும் சிங்கள அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது என்பதும் எங்களுக்குத் தெரியும்.


மேற்கூறப்பட்ட அடிப்படை உரிமைகளை உள் ளடக்கிய மாற்றுத் திட்டத்தை ஆக்க பூர்வமாகப் பரிசீலனை செய்வதற்கும் நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறோம்.

ஆனால், சிங்கள அரசாங்கம் இதற்கு இணங் கப் போவதில்லை. அப்படி இருந்தும் நாங்கள் பேச்சுவார்த்தைகளை நிராகரிக்கவில்லை.

எமது வேண்டுகோள் நீதி, நியாயம் என்னும் எல்லைகளுக்கு உட்பட்டதென்பதையும், அதே போன்று நீதி, நியாயத்திற்குட்பட்ட தீர்வுகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருப்ப தையும், சிங்கள அரசு அப்படியான நாகரிக மான தீர்வொன்றினை ஏற்றுக் கொள்ளமாட்டாது என்பதினையும் சர்வ தேச சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காகவே பேச்சுவார்த்தை களுக்கு இணக்கம் தெரிவித்துள்ளோம்.

என்றோ ஒரு நாள் சிங்கள அரசாங்கத்தின் நீதி, நியாயமற்ற இனவாதப் போக்கினை சர்வ தேச சமுதாயம் அறிந்து கொள்ளுமென எமக்கு நம்பிக்கை உண்டு. அப்படியான நிலை ஏற்ப டும் பொழுது தான் சர்வதேச சமுதாயத்தின் அனுதாபமும், ஆதரவும் எங்கள் பக்கம் திரும் பும்.

## முடிந்த முடிபு



தா. இராமலிங்கம்

அந்தக் குடும்பம் குடிவாழ்ந்த வீடு
முழுக்க முழுக்க எரிந்து போனது

இப்போது
புதிய கம்பு
புதிய பாய்ச்சு
புதிதாய் வீடு கட்டுறார்.

அன்னை பின்னிக் கொடுக்க
தங்கை எடுத்துக் கொடுக்க
தம்பி உரலில் நிண்டுகொண்டு,
இளைஞன் சொல்லிக் கொடுத்துக் கொடுத்து
கிடுகு வைத்துக் கட்டுகிறார்

படம் பிடித்தபின்
பேட்டியைத் தொடங்கினேன்.
அன்னையை விளித்து
'பிள்ளைகள் வேறுபேர் இல்லையோ' என்றேன்

அவளின் விழிகள் கலங்கி வழிந்து
அருகே நின்ற
வட்டு வதங்கிய வடலியில் பதிந்தன
பெருமூச்சு எறிந்து அவள் பேசாதிருந்தாள்

'ராணுவம் புகுந்து
வீட்டோடு எரித்துக்
கொன்று விட்டது' என்றான் இளைஞன்

'பிறகும் ஏன் இங்கே கட்டுகிறீர்? என்றேன்

'எமக்கு உரிமையுள்ள நிலத்துண்டில்தானே
எமக்குரிய வீட்டை நாங்கள் கட்டுவோம்'

'மீண்டும் எரித்தால் என்ன செய்வீர்கள்?'

'மீண்டும் எரித்தால் மீண்டும் கட்டுவோம்'
கடைசி ஒருவர் உயிர் உள்ளவரை
குடியிருக்க வீடு வேணுமே!
மீண்டும் எரிந்தால்
மீண்டும் கட்டுவோம்' என்றான் இளைஞன்,

'ஆமாம்;
மீண்டும் எரித்தால்
மீண்டும் கட்டுவோம்' என்றாள் அச்சிறுமி.

www.tamilarangam.net




கிழக்கில் புலிகள்
மீட்புப் பணியில்



www.tamilarangam.net

# சோவியத் கூட்டமைப்பின் வீழ்ச்சி





சோவியத் சோஷலிச குடியரசுகளின் கூட்டமைப்பு என்ற நாடு தற்போது உலகப்படத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டது. அதன் ஜனாதிபதியாகவிருந்த கோர்பச்சேவும் நத்தார் தினத்துடன் பதவி விலக்கப்பட்டு அரசியல் அஞ்ஞாதவாசத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். உலகத்தில் தலைகீழான இம்மாற்றத்திற்கு காரணமாக இருந்தவரே அதற்குப் பலியாகி விட்டார். இரு உலகம் -இரு முகாம்கள் என்ற நிலை மாறி விட்டது. முதலாளித்துவ முகாம், சோஷலிச முகாம் என்று உலகம் பிரிந்து இருந்த நிலை பெரும்பாலும் நீங்கி விட்டது. அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும், இரண்டாம் உலகப் போரின் பின்னர் நிலவிய பனிப்போர் (cold war) அமெரிக்காவின் வெற்றியில் முடிந்து விட்டது. முதலாளித்துவம் தற்காலிக வெற்றிக் களிப்பில் மிதக்கிறது. எஞ்சியுள்ள சோஷலிச நாடுகளான சீனா, கியூபா, வியட்னாம், வடகொரியா போன்றவையும் முதலாளித்துவ அம்சங்களான தனியார் முயற்சிகளையும், கட்டுப்பாடற்ற சந்தையையும் தமது பொருளாதாரத்தில் ஓரளவு இணைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளன. ஆயினும் பல்நாட்டு நிறுவனங்கள் மீது அவை எச்சரிக்கையாகவே உள்ளன. சோஷலிச நாடுகளின் தலைவனாக இருந்த சோவியத் யூனியனின் இடத்தை சீனா நிரப்ப முயலும் என்று கருதப்படுகிறது. அதேவேளை எஞ்சியுள்ள சோஷலிச நாடுகளையும் முதலாளித்துவ பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளாக்க முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. இப்போராட்டத்தில் சோஷலிச நாடுகளே தோற்றுப் போகும் என்று அரசியல் வல்லுனர்கள் ஆருடம் தெரிவித்துள்ளனர். இனிவரும் அண்மைக் காலங்களில் இருவேறுபட்ட முதலாளித்துவங்களுக்கே போட்டி இருக்கும் என்று கூறப்படுகின்றது. அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றின் தலைமையிலான பொருளாதாரப் போட்டி உலகில் நிலவும் என்பதும் மறுக்க முடியாது. இந்நிலையில், அணிசேரா நாடுகளின் அமைப்பின் தேவையும் அருகி விட்டது. முன்னர் இரு முகாம்களாக உலகம் பிரிந்திருந்த நிலையில், பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகள், இரு முகாம்களையும் சேராத நாடுகளாக, அம்முரண்பாட்டைப் பயன்படுத்தி முன்னேற முயன்றன. தற்போது இரு முகாம்கள் என்ற நிலை நீங்கிய காரணத்தினால், நடுநிலை என்ற தந்திரோபாயத்தை பயன்படுத்த முடியாத நிலை தோன்றி விட்டது. எனவே பலம் பொருந்திய ஒரே முகாமின் அழுத்தங்களுக்கு உட்படும் நிலையும், இனிவரும் காலங்களில் ஏற்படும் முரண்பாடுகளைப் பயன்படுத்தும் போக்குமே பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளிடம் காணப்படும். மூன்றாம் உலகம் என்ற பெயர் நீங்குவதுடன், பின்தங்கிய நாடுகள் எவ்வாறு இனி மேல் அழைக்கப்படும் என்பதும் தெரியவில்லை.

சோவியத் இறைமைக் குடியரசுகளின் கூட்டமைப்பு என்ற பெயரில், மத்தியில் உறுதியான ஆட்சியைக் கொண்ட இன்னொரு சமஷ்டி ஆட்சியை நிறுவ மேற்கொண்ட கோர்பச்சேவின் முயற்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, சோவியத் யூனியன் சின்னாபின்னம் அடையும் நிலையை அடைந்தது. அதுவும் உக்ரேன் என்னும் வளமும், பலமும் பொருந்திய குடியரசு முற்று முழுதாக தனிப்பட்டுப் போகுமானால், ஏனைய குடியரசுகள் பிழைக்கவே வாய்ப்பில்லாது போய்விடும் நிலை தோன்றியது. இந்நிலையைத் தடுக்க, டிசம்பர் 8ம் திகதி, ஸ்லாவிய இனக் குடியரசுகளான ரஷ்யா, உக்ரேன், பைலோ ரஷ்யா ஆகியவை ஒருங்கிணைந்து சுதந்திர நாடுகளின் பொதுநலவாய அமைப்பை உருவாக்கின. பின்னர் டிசம்பர் 21ம் திகதி, மத்திய ஆசிய 5 குடியரசுகள் தாமாக விரும்பி இப் பொதுநலவாய அமைப்பில் இணைந்து கொண்டன. 3 பால்ரிக் நாடுகளையும், ஜோர்ஜியா என்னும் குடியரசையும் தவிர 11 குடியரசுகள் இவ்வாறு பொதுநலவாய நாடுகளாக இணைந்து கொண்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


லோ. திலகர்




**சோவியத் சோசலிசக் குடியரசுகளின் கூட்டமைப்பு என்ற நாடு தற்போது உலகப் படத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.**

பொதுநலவாய அமைப்பின் தலைநகராக பைலோரஷ்யாவின் தலைநகரான மின்ஸ்க் ஆக்கப்பட்டுள்ளது. உணவு, எரிபொருள் ஆகியவற்றை ஏனைய குடியரசுகளிடமிருந்து மலிவாகப் பெறுவதும், தமது உற்பத்திப் பொருட்களையும், மூலப் பொருட்களையும் சந்தைப் படுத்துவதுமான பொருளாதார நோக்கமே இவ்விணைவிற்கு முக்கிய காரணமாக உள்ளது. ஜோர்ஜியக் குடியரசில், அதன் ஜனாதிபதிக்கும், அவரின் எதிர்ப்பாளருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு ஆயுத முரண்பாடாக விரிவடைந்த குழப்ப நிலையில் இருப்பதால், இப் பொதுநலவாய அமைப்பில் இணையுமா என்பது தெரியவில்லை. ரஷ்சியக் குடியரசின் மேலாதிக்கம், ரஷ்ய மொழியின் ஊடுருவல், சோஷலிசப் பரிசீலனையின் தவறுகள் ஆகியனவையே சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குக் காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன. ஆயினும், சுதந்திர நாடுகளாக, எவ்வித கட்டுப்பாடும் இல்லாத வகையில், தன்னிச்சையாக பொருளாதார நோக்கங்களுக்காக இணைந்து செயற்பட முற்படும் தன்மைகளையும் இங்கு காண்கிறோம்.

இப்பொதுநலவாய நாடுகளை உலக சமூக நாடுகள் அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளன. ஐ. நா சபையின் பாதுகாப்புச் சபையில், சோவியத் யூனியனுக்கு இருந்த நிரந்தர ஸ்தானத்தை ரஷ்ய நாட்டுக்கு வழங்க பொதுநலவாய அமைப்பிலுள்ள ஏனைய நாடுகள் மாத்திரமல்ல, பாதுகாப்புச் சபை அங்கத்துவ நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. முன்னைய சோவியத் குடியரசுகளில் 4 குடியரசுகளில் உள்ள




கடைசிக் காட்சி

நன்றி: Far Eastern Economic Review

28000 க்கு மேற்பட்ட அணு ஆயுதங்களின் கட்டுப்பாட்டுப் பொறுப்பு, அந்நாட்டுக் குடியரசுத் தலைவர்களின் கூட்டுப் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. ஆயினும், ஏனைய மரபு ரீதியான படைக்கலங்கள், ஆயுதப்படைகளின் கட்டுப்பாடு, சம்பள விநியோகம், கூட்டு இராணுவ செயல்பாடு ஆகியவை குறித்து தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை. சில குடியரசுகள், தமது சொந்த இராணுவங்களை வைத்திருக்க விரும்புகின்றன. அதேபோல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ரூபிலே பொதுவான நாணயமாக விளங்கும். ஆயினும், தனிப்பட்ட நாணயங்களை பொதுநலவாய அமைப்பில் உள்ள நாடுகள் வைத்திருக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

பொருளாதார ரீதியில், இப் பொதுநலவாய நாடுகள் மிகவும் சிக்கலான நிலையில் இருக்கின்றன. உணவுப் பற்றாக்குறை காணப்படுகிறது. இவை உடனே சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறி, பொருள்களின் விலைக் கட்டுப்பாடுகளை நீக்கியதால், பொருள்கள் பதுக்கப்பட்டும், விலைகள் அதிகரித்தும் காணப்படுகின்றன. சந்தைப் பொருளாதாரத்திற்கு பழக்கப்பட்டவர்களாக மக்களோ, நிர்வாகமோ இல்லை. இந்த நிலை மாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதே வேளை இனரீதியான தேசியம் (Ethnic nationalism) ஒவ்வொரு குடியரசிலும் வளர்ந்து வருகின்றது. பல்வேறு இனங்களுக்கும், பல்வேறு குடியரசுகளில் குடியேறியிருக்கின்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


ரஷ்யர்களுக்கும் இடையில் இனவாதப் போர்கள் வெடிக்குமா என்ற அச்சம் நிலவுகின்றது. மத்திய ஆசியாவிலுள்ள 5 முஸ்லீம் குடியரசுகள் பொருளாதாரக் கூட்டாக, இறுக்கமற்ற கூட்டமைப்பாக (loose confederal) இணைய முயன்று வருகின்றன. இக்குடியரசுகளில் இஸ்லாமிய அடிப்படைவாதக் கருத்துக்களும் பெருகி வருகின்றன. இவற்றை தம்பக்கம் கவர ஈரான், துருக்கி போன்ற நாடுகள் முயன்று வருகின்றன. துருக்கிய நாடு, தேசியவாதம் என்ற அடிப்படையிலும், ஈரான், இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற ரீதியிலும், இவற்றுடன் கூட்டுச் சேர முனைகின்றன. இவ் மத்திய ஆசியக் குடியரசுகளில் ஒன்றான கஸக்கிஸ்ரானில் ஏராளமான அணு ஆயுதங்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் இக்குடியரசுகளுக்கு தனது கராச்சித் துறைமுகத்துக்கு பாதை அமைத்துக் கொடுக்கப் போவதாக தெரிவித்துள்ளது. ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில், இஸ்லாமிய அடிப்படைவாத ரீதியில் ஒரு பலம் பொருந்திய கூட்டமைப்பு ஒன்று உருவாகுவது குறித்து, ஐரோப்பிய நாடுகள் கவலை கொண்டுள்ளன. அதே வேளை, ஆசியாவின் வட பகுதி நீளத்தில் -இஸ்லாமிய அடிப்படைவாத அரசுகளின் கூட்டு அமைவது குறித்து இந்தியா போன்ற ஏனைய ஆசிய நாடுகளும் அச்சம் கொள்ளத் தொடங்கியுள்ளன. இது இன்னொரு உலகச் சமன்பாட்டிற்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ★

www.tamilarangam.net

தமிழீழ அரசின் முதல் அங்கம்

## காவல்துறை





தலைவர் பிரபாகரன், தமிழீழ காவல்துறையின் மரியாதை அணிவகுப்பை ஏற்றுக்கொள்கிறார்

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும், தமிழீழக் காவல் பணிமனைகள் திறக்கப்பட்டு வருகின்றன. தமிழீழ அரசின் முதல் அங்கமாக காவல் பணிமனைகள் திறக்கப்படுகின்றன. யாழ் குடாநாட்டில் இயங்கும் காவல்துறை, வன்னிப்பகுதிகளுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது. அடுத்தகட்டமாக, தமிழீழ காவல் துறையோடு இணைந்து செயற்பட நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தமிழீழ காவல் துறையின் பொறுப்பாளரான திரு. நடேசன் அவர்கள் பத்திரிகையாளர் மத்தியில் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "ஒரு நாட்டின் நிர்வாகத்திற்கு பொலிஸ் படை எப்படி முக்கியமானதோ, அதேபோல்தான் தமிழீழ நிர்வாகத்திற்கு காவல்துறை முக்கியமானதாக அமைகின்றது." எனத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "குற்றவாளிகளை கண்டுபிடிப்பதைவிட, குற்றங்களை செய்யாமல் விடுவதற்கான நடவடிக்கைகளையே எமது காவல்துறை கையாளும். குற்றவாளிகள் சார்பில் ஆஜராவதற்கு சட்டத்தரணிகள் தான் வேண்டும் என்றநிலை இங்கில்லை; பொதுமக்கள் யாராயிருந்தாலும் குற்றவாளிகள் சார்பில் வாதாடுவதற்கு அனுமதிக்கப்படுவர்." எனத் தெரிவித்துள்ளார்.

www.tamilarangam.net

# உதிக்கும் திசை நோக்கி ஒரு பயணம்..

விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையா கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக் கட்டுரையில் இருந்து.....





பல்கலைக்கழக அகதி முகாமில் நடந்த விடயங்களை முழுமையாக அறிந்துகொள்ள விரும்பினேன். திரு கரிகாலனிடம் அதைப்பற்றிக் கேட்டேன். அதற்கு அவர் "பொதுமக்கள் கருத்தை முதலில் கேளுங்கள். இதில் ஏற்படும் சந்தேகங்களுக்கு நான் விளக்கமளிக்கிறேன்" என்றார். இன்று மைலவட்டுவான் பகுதியில் புதிதாக உருவாகியிருக்கும் சந்தையைச் சுற்றிப் பார்ப்போம் என்றார். மாலை நேரமாதலால் அவரின் ஆலோசனைப்படி மைலவட்டுவான் சந்தைப் பகுதிக்குச் சென்றோம். மைலவட்டுவான் ஏன் இவ்வளவு பிரபலமான இடமாக மாறியது? இந்தச் சந்தைக்கு பொருள்கள் எப்படி, எங்கிருந்து வருகின்றன என்பது பற்றிப் பலரிடமும் விசாரித்து அறிந்தேன்.

வாழைச்சேனையிலிருந்து பிள்ளையாரடிவரை, பிரதான வீதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் எந்தத் தமிழ் மக்களும் வீட்டில் இல்லை. அனைவரும் அகதிகளாகிவிட்டனர். இந்தப் பகுதியின் இடையில் ஏறாவூர் என்ற முஸ்லீம் கிராமம் மட்டும் இருக்கின்றது. அங்கு முஸ்லீம்கள் மட்டுமே இருக்கிறார்கள். மட்டக்களப்பு நகரிலிருந்து பிரதான பாதை வழியாக பொருள்களை வாங்கி வருவதானால் ஏறாவூருக்குள்ளால்தான் வரவேண்டும். எனவே அது சாத்தியமாகாத விடயம். ஆதலால் இங்கிருந்து வயல்வெளிகள் அடங்கிய பாதைகள் ஊடாக பன்குடாவெளி என்னும் இடத்தைச் சென்று அங்கிருந்து தோணிகள் மூலம் நரிப்புல் என்னும் இடத்திற்குச் சென்று வவுணதீவுப் பாலம் ஊடாக மட்டக்களப்பு நகருக்குச் சென்று பொருள்களை வாங்கி வருகின்றனர். அதாவது யாழ்ப்பாணத்திற்கு வரும் வியாபாரிகள் ஆனையிறவு இராணுவத்தைச் சந்திக்காமல் பூநகரி கொம்படிப் பாதைகளைப் பாவிப்பது போல அங்கேயும் நடக்கிறது. இங்கே இராணுவத்திற்குப் பயம், அங்கே முஸ்லீம்களுக்குப் பயம். வவுணதீவுப் பாதையைப் பயன்படுத்துவோர் இராணுவத்தை சந்தித்து அவர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே மட்டக்களப்பு நகருக்குச் செல்கின்றனர். இரு இடங்களிலும் ஒரு ஒற்றுமை என்னவென்றால் பொருள்கள் வாங்கி வரப்படுவதுதான்.

மைலவட்டுவான் பகுதிக்கு கொண்டுவரப்படும் பொருள்கள் இங்கிருந்து திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதிகளுக்குள் காட்டிலும் வேறு இடங்களிலும் எஞ்சியிருக்கும் தமிழ் மக்களால் வாங்கிச் செல்லப்படுகின்றன. தற்போதைய நெருக்கடி காரணமாக புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதி எவ்வாறு முக்கியத்துவம் பெற்றதோ அதேஅளவு முக்கியம் மைலவட்டுவானுக்கு. இராணுவத்தைத் தாண்டிச்செல்லப் பயப்படுவோர் அம்பாறை மாவட்டத்தின் நுழைவாயில் போலவுள்ள மருதமுனைக்குப் போய் சாமான் வாங்கி வருவர். முஸ்லீம்களின் வியாபாரம் முழுக்க முழுக்க தமிழ்மக்களிடமே தங்கியுள்ளதால் இப்பகுதியில் சிறிய தளர்ச்சி நிலை காணப்படுகிறது. நாளாந்தம் கொல்லப்படாமல் ஒரு வாரத்துக்கோ பத்துநாட்களுக்கோ ஒருமுறைதான் ஒருவர் இருவராக யாராவது தமிழ் வியாபாரிகள் கொல்லப்படுவதுண்டு. ஆனாலும் இரு தினங்களுக்குள் நிலைமை சீரானதுபோல ஒரு தோற்றம் காண்பிக்கப்பட்டு தமிழ் வியாபாரிகள் அழைக்கப்படுவர். இவர்கள் மருதமுனையிலிருந்து பொருள்கள் வாங்கிவந்து குருமண்வெளிக்கு வந்து அங்கிருந்து தோணிகள் மூலம் ஆற்றைக் கடந்து பண்டூருக்கு வருகின்றனர். அம்பாறை மாவட்டத்திலிருந்து சைக்கிள் மூலமே திருகோணமலை மாவட்டத்திற்கு பொருள்கள் போகின்றன. அதுவும் சுற்றுவழியாக, நேராகத் தொடும் மூக்கை தலையைச் சுற்றித் தொடுவது போல. எல்லாமே உயிராபத்தின் மத்தியில்தான். சில நாட்களுக்கு முன் மருதமுனையிலிருந்து பெற்றோல் வாங்கிக்கொண்டு வர முயன்ற ஒரு தமிழ் வியாபாரியை முஸ்லீம் ஊர்காவல் படையும் இராணுவமும் அவர் வாங்கி வந்த பெற்றோலை அவருக்கு மேலே ஊற்றி உயிரோடு தீ மூட்டியதாகவும் அறிந்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



மைலவட்டுவான் சந்தையில் ஒரு கடைக்குச் சென்றேன். அங்கே கடைக்காரர் ஒருவருக்கு சீனியை நிறுத்துக் கட்டிக் கொடுத்தார். உற்று அவதானித்தேன். மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பிரத்தியேகக் கோவைகள் மற்றும் ஆவணங்கள் கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எனது அருகில் நின்ற கரிகாலனிடம் இதைக் காட்டினேன். அப்போது காரிகாலன் "இதை யார் உங்களுக்குத் தந்தார்கள்? சாமான்கள் பார்சல் செய்ய இதைப் பயன்படுத்த வேண்டாம்" என்று கடைக்காரரிடம் சொன்னார். கடைக்காரர் "கிலோ 8 ரூபா வீதம் இதை வாங்கினோம். இங்குள்ள கடைகள் எல்லாவற்றையும் பாருங்கள். எல்லாக் கடைகளிலும் இதில்தான் சாமான் சுற்றிக்கொடுக்கிறார்கள். நீண்ட நாட்களாக இதைத்தான் பாவிக்கிறோம்." என்றார் அப்பாவித்தனமாக. கரிகாலன் தலையிலடித்துக் கொண்டார். பக்கத்திலுள்ள அனைத்துக் கடைகளுக்கும் சொல்லி அவற்றைச் சேகரிக்கச் சொன்னார்.

கரிகாலனுடன் புறப்பட்டு அவரது அலுவலகம் அமைந்திருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டோம். இடையில் முந்தன்குமாரவெளி என்னும் இடத்தை அடைந்தோம். அந்த இடத்தில் 20 அடி உயரமும், 75 யார் நீளமுமான பாலம் ஒன்றைக் கண்டோம். பாலத்தின் கீழ்ப்பகுதி பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வெட்டுவாய்க்கால் ஆறு என்னும் ஆறு அங்கே உள்ளது. ஆற்று நீர் இன்னுமொரு வாய்க்காலினூடாகச் செல்வதை மட்டுப்படுத்தவே இப்பாலம் அமைக்கப்பட்டிருந்தது. நாங்கள் போன காலத்தில் தண்ணீர் போகாமல் தடுப்பு போடப்பட்டிருந்தது. ஆனாலும் ஏற்கனவே பாய்ந்த தண்ணீர் பள்ளமாக இருந்த பகுதிகளில் தேங்கியிருந்தது. பச்சை நிறமாக இத்தண்ணீர் காணப்பட்டது. பாலத்தையே கூரையாகக் கொண்டு அதன் கீழ் அனேக குடும்பங்கள் தமது குடியிருப்புக்களை அமைத்திருந்தன. தனித்தனியாக சமையல் நடந்துகொண்டிருந்தது. அங்குள்ள ஒரு பெரியவரைச் சந்தித்தேன். அவருடன் உரையாடத் தொடங்கினேன். ✡

## உள்ளது உள்ளபடியே!

ஈழத்தமிழர்களாகிய எங்கள் இனத்துக்காரர்களுக்கு நாங்கள் மனிதாபிமானத்தோடு உதவுவது "தேசத்துரோகம்" என்றால், எங்கள் மனித நேயம் உங்களுக்கு " தேசத்துரோகம்" என்றால் அந்தத் தேசத் துரோகத்தை நாங்கள் தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம்!

- திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீரமணி -

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீது, தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். அது எல்லை மீறிப் போய்க்கொண்டிருக்கிறன்து.

- 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு -

இனப் படுகொலையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அங்குள்ள தமிழர்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களை கப்பல் மூலம் இறக்குமதி செய்யமுற்பட்டு உள்ளனர். இந்திய அரசு அக்கப்பலை நடுக்கடலில் கைப்பற்றி உள்ளது. இந்திய அரசின் இச் செய்கை தவறானது.

- பாட்டாளி மக்கள் கட்சி பண்ருட்டி ராமச்சந்திரன் -

எல்லா விபரங்களையும் வைத்துக் கொண்டு, ராஜீவ் கொலையை விசாரணை செய்யும் அதிகாரிகளிடம் ஈழப்புலிகள் அகப்படுகிறார்கள். குற்றத்திற்கான ஆதாரங்களை வைத்துக் கொண்டு அகப்படுகிற அளவுக்கு புலிகள் முட்டாள்களா? மக்களுக்கு அதிகாரிகள் கண்ணாமூச்சி காட்டுகிறார்கள்.

- 'தினமணி' நாளேட்டில் வாசகர் கடிதப் பகுதியில் போ. வஜ்ரவேலு -

இலங்கை அரசை நீண்டகாலத்திற்கு எதிர்த்துப் போராட முடியும் என விடுதலைப் புலிகள் நிரூபித்து விட்டார்கள்.

- தொண்டமான் -

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


# தமிழகம் ஒரு பார்வை

www.tamilarangam.net

தடா (பயங்கரவாத குழப்பவாத தடைச்சட்டம்), தேசிய பாதுகாப்புச்சட்டம், பிரித்தானிய காலத்து(1911ம் ஆண்டு) ராஜ துரோகச் சட்டம்.... தமிழகத்தை உலுக்கிக்கொண்டிருக்கின்ற இரும்புச்சட்டங்கள் இவை.
இந்த இரும்புக் கரங்களுக்குள் சிக்கிக்கொள்பவர்கள் இலகுவில் தப்பித்துக்கொள்ள முடியாது. மிகவும் ஆபத்தான, கொடுமையான சட்டங்கள். ஜனநாயக விழுமியங்களுக்கு சாவுமணி அடிப்பவை என்றெல்லாம் இச்சட்டங்கள் விளிக்கப்படுகின்றன.

பேச்சுரிமை, எழுத்துரிமை உள்ளிட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பறிக்கின்ற பாசிசச் சட்டம் என பகிரங்க விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் தடாச் சட்டம் உள்ளாகியுள்ளது.



# நசுக்கும் கரங்கள்

விடுதலைப் புலிகள், விடுதலைப்புலிகளை ஆதரித்தோர், ஆதரிப்போர், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு உடந்தையாக இருந்தோர் என்ற வகையில் 1000க்கும் மேற்பட்ட தமிழக மக்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். பலர் தடா போன்ற சட்டங்களின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆட்சியாளர்கள், விடுதலைப் புலிகளையும், அதன் ஆதரவாளர்களையும் தமிழகத்தில் இருந்து துடைத்துவிடுவது என்ற எண்ணத்துடன் இத்தகைய சட்டங்களை பிறப்பித்தார்கள் என்று கூறப்பட்டபோதும், இச்சட்டங்கள் அந்தரங்கமான உள்நோக்கம் கொண்டதெனப்படுகின்றது. நீண்டகால இரகசிய திட்ட அடிப்படையில் தமிழின உணர்வுகளை முற்றாக அழித்தொழிப்பதற்கும், அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதற்குமே ராஜிவ் கொலையை சாட்டாக வைத்து இவை பிரயோகிக்கப்படுவதாக தமிழின உணர்வுள்ளோரும், எதிர்கட்சியினரும் மேடைக்குமேடை, எழுத்துக்குஎழுத்து பிரச்சாரம் செய்துவருகின்றனர்.

இத்தகைய இரும்புச் சட்டங்கள் தமிழகத்தில் பிரயோகிக்கப்பட்ட வேகத்தில், தமிழகம் உறைந்துபோனதென்னவோ உண்மைதான். மூச்சற்று, பேச்சற்று, ஸ்தம்பித்துநின்றதுதான். சில ஜனநாயக, முற்போக்கான, இனவுணர்வுள்ள தலைவர்கள், கட்சிகள், அமைப்புக்கள், பத்திரிகைகள் என்பன மத்திய, மாநில அரசுகளை கடுமையாக விமர்சித்ததைத் தவிர, தமிழகத்தின் இரத்தச் சுற்றோட்டம் சற்று நின்றேபோனது.

சாதாரண பாமர மக்கள் தொடக்கம் உயர்மட்ட அதிகாரிகள் வரை இச்சட்டம் துரத்திச் சென்றது. வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் என்று கைதுப் படலம் நீண்டுகொண்டே செல்கின்றது.

ராஜிவ் காந்தியின் கொலை வழக்கில் தனது

அரசியல் எதிரிகள் மாட்டிக்கொள்ளாமல் தப்பித்துக்கொண்டதை உணர்ந்த முதல்வர் ஜெயலலிதா, கிடப்பில் கிடந்த பத்மநாபா கொலை வழக்கை தோண்டி எடுத்துள்ளார் என எதிர்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இது பழிவாங்கும் படலமே என பகிரங்கமாகவே அறிவித்துள்ளன.

ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்ட மறுநிமிடமே, விடுதலைப்புலிகள்தான் குற்றவாளிகள் எனக்கூறிக்கொண்டு, நடவடிக்கை எடுக்க முனைவது நியாயமற்ற செயல்; அப்படியானால் நீதிமன்றங்கள் எதற்கு, நீதிவிசாரணைகள்தான் எதற்கு ? இது அப்பட்டமான உள்நோக்கம் கொண்டது என சட்டத்துறை சார்ந்தவர்கள் பிரஸ்தாபித்துள்ளனர்.

சில விலைபோகும் பத்திரிகைகளும் திட்டமிட்டமுறையில், அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் வேண்டுமென்றே கதைகள் புனைகின்றன எனவும், தமிழினத்திற்கு துரோகம் செய்கின்றோம் என்று புரிந்துகொள்ளாமலே துரோகம் புரிகின்றன என்றும், பத்திரிகா தர்மத்தையே அவை இழந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

விடுதலைப் புலிகள்தான் குற்றவாளிகள் என்றோ, குற்றம் செய்தவர்கள் இவர்கள்தான் என்றோ எந்த நீதிமன்றத்திலும் தீர்ப்பு வழங்கப்படவில்லை; மாறாக குற்றப்பத்திரிகைகூட தாக்கல் செய்யப்படவில்லை.
இந்தநிலையில், விடுதலைப் புலிகளை ஆதரித்தவர்கள், ஆதரிப்போர் எல்லாம் தேசத்துரோகிகளா?



ஆக்கம்: ஜெயா

இந்திய இராணுவத்துடன் மோதும்வரை அவர்கள் விடுதலைப் போராளிகள், மோதியபின் பயங்கரவாதிகளா? அவர்கள் தங்கள் மக்களுக்காகவே போராடுகின்றார்கள்; இந்தியாவிற்கு எதிராகவல்ல.

விடுதலைப் புலிகளை ஆதரித்தவர்கள் வரிசையிலே, பெரியளவில் உதவிபுரிந்த மறைந்த, மாண்புமிகு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களை குற்றவாளிக்கூண்டில் ஏற்ற ஆட்சியாளர்கள் தயாரா? என்றெல்லாம் கேள்விக்கணைகள் எழுந்துள்ளன.

இன்று நிலைமை வேகமாகத் திரும்பிவருவதை கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. எதிர்ப்புப் பேரணிகள் நடத்தப்படுகின்றன. பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. பத்திரிகைகள் பலம் கொண்டு எதிர்க்கின்றன.

விடுதலைப் புலிகளை ஆதரிப்பதும், ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உதவி புரிவதும், அம்மக்களுக்கு அன்புக்கரம் நீட்டுவதும் எமது மனிதாபிமானம் கலந்த இனவுணர்வு; அதை எந்தச் சட்டங்களாலும் தடைசெய்யமுடியாது என்றெல்லாம் முழக்கங்கள் கேட்கின்றன.

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை, தமது அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்திய அரசியல் வாதிகள் சிலர் குத்துக்கரணம் அடித்து தம்மைப் பாதுகாக்க முனையக்கூடும்; ஆனால் உண்மையான ஜனநாயக, புரட்சிகர சக்திகளும், இன உணர்வுள்ள தலைவர்களும், மக்கள் அரசியல் நடத்தும் தலைவர்களும், சாதாரண மக்கள் எல்லோரும், நிலையான உள்ளம்படைத்தவர்கள் என்றும் ஈழவிடுதலையை, தமிழனுக்கு என்றொரு நாடு உருவாவதை ஆதரித்தே தீர்வார்கள்.

அசாம், பஞ்சாப், காஷ்மீர் என்று தீவிரவாதம் தலைதூக்கியுள்ள மாநிலங்கள் வரிசையில் தமிழகமும் சேர்க்கப்பட்டுள்ளது. இது ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறையைத்தான் காட்டுவதாகவும், அம்மாநிலங்களில் கடுமையான சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டதன் பின்னர்தான் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

தடா போன்ற சட்டங்கள் ஒரு மாநிலத்தில் பிரயோகிக்கப்படுவதற்குமுன், அங்கு அரசின் இறைமை முற்றாக பாதிக்கப்பட்டுவிட்டதா என உறுதி செய்துகொள்ளவேண்டும்; சாதாரண சட்டங்கள் மூலம் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது என்பதை முடிவு செய்துகொள்ளவேண்டும். அப்படியானால், தமிழகத்தின் நிலைமை அப்படியானதா? அரசு தனது இறைமையை தமிழகத்தில் முற்றாக இழந்துவிட்டதா? சாதாரண சட்டங்கள் செயலிழந்துவிட்டதா? புதிய அரசு பதவிஏற்றபின் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாக மத்திய, மாநில அரசுகள் ஒப்புக்கொள்கின்றனவா? இவ்வாறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.
எது எப்படியிருப்பினும், ஆட்சியாளர்களின் விருப்பிற்கும், எதிர்பார்ப்பிற்கும் எதிர்மாறான சம்பவங்களே சந்தடியில்லாமலும், சந்தடியுடனும் மேடைஏறுகின்றன என்பதே அவதானிகளின் கருத்தாகும்.

தமிழகத்தில், சட்டங்கள் மக்களை மிரட்டித் துரத்திக்கொண்டிருக்கும் இவ்வேளை, தமிழகத்தின் அண்டை மாநிலமான கர்நாடகத்தில் இருந்து, தமிழக மக்கள் அகதிகளாகத் துரத்தியடிக்கப்படுகின்றனர். காவேரிநீர்ப் பங்கீடு தொடர்பாக தமிழக, கர்நாடக அரசுகளுக்கிடையே எழுந்த பிரச்சனை, பெரும் கலவரமாக

தொடர்ச்சி 25ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# தாய்க்கு நிகரானவன்

- சுபா -

சூரியக் கதிர்கள் வானில் சுடராயின. உயிர்ப்புற்று எழுந்தது காடு. குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. ஆற்றுநீர் கற்களை ஊடுருவிப் பாயும் ஓசையும், பறவைகளின் கீதமும் மனதுக்கு ரம்மியமாக இருந்தன.

விடுதலைப் புலிகளின் புனித இலட்சியமாம் சுதந்திர, சமதர்மத் தமிழீழம் காண எனது உடல், உயிர், ஆன்மா அனைத்தையும் அர்ப்பணித்துப் போராடுவேன்......

எனச் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு புதிய தோழர்கள் தமது பயிற்சியை ஆரம்பித்துக் கொண்டிருந்தார்கள்.

சூரியப் பிரகாசமான முகம், வெண்ணிற ஒளிரும் பற்கள், கூர்விழிப் பார்வை, படை அணித் தலைவனின் கம்பீரம் திகழ்கின்ற நடையோடு பயிற்சிக் களத்தில் தோழர்களின் பயிற்சியை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு வருகிறான் கஜன். தற்காப்பு யுத்தமுறைப் பயிற்சிகளையும் அவர்கள் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

பயிற்சி முடிந்து இரவு வேளைகளில் எல்லோரும் அவனைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு மண்ணில் வீரம் விளைந்த கதையை கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவன் உணர்ச்சிக் கலவையுடன் கதை சொல்லிக் கொண்டிருப்பான்.

**சிறுகதை**

ஆயிரம் கேள்விக் கணைகளோடு தோழர்களின் விழிகள்; முறை வைத்துக்கொண்டு கேள்விகளைத் தொடுப்பார்கள். அவன் அலுக்காது சொல்லிக் கொண்டிருப்பான்.

அவனோடு தோழர்கள் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த நாளில் ஒரு இளைய தோழன் கடுமையான சுரத்தால் பாதிக்கப்பட்டு விட்டான்.

நெருப்புத் தணலை ஒத்த வெப்ப அனல் அவனது உடலிலிருந்து வீசியது. அப்பு, ஆச்சி ஏலாமக் கிடந்து அனுங்கிறது மாதிரி அவன் நோயால் அனுங்கினான்.

பெய்த மழையில் முகாமின் தரைப்பகுதி வேறு ஊற்றுக் கண்டு விட்டது. குளிரைச் சுமந்த காற்று சீலைக் கூடாரத்தை விலக்கி, விலக்கி பெயர்த்து விடுவது போல் ஊதியது. குறண்டி இழுத்துப் போர்த்துக் கொண்டு தோழர்கள் படுத்துக் கிடந்தார்கள்.

முகாம் அமைந்திருந்த சூழலைச் சுற்றி எதிரியின் நடமாட்டமோ, உளவாளிகள் நடமாட்டமோ இருக்கிறதா என்பதை அவதானித்துவிட்டு சற்று முந்தி வந்து படுத்திருந்த கஜனுக்கு அந்தத் தோழனின் அவலமான நிலையை உணர்த்தும் ஒலி காதுகளில் அறைந்து கொள்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பதட்டமின்றி பொறுப்போடு அந்த தோழனிடத்து சென்றான். மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்து நோய்க்குரிய மருத்துவம் செய்தான். ஆற்றங்கரையை நோக்கி நடந்து ஈரலிப்பற்ற வெண்மணலை அள்ளிவந்து பரப்பி அந்தத் தோழனது படுக்கையை ஈரலிப்பற்றதாகவும் மிருதுவாகவும் ஆக்கினான். அவனது உள்ளங்கால்களை நன்றாக அழுந்தத் தேய்த்து சூடாக்கினான்.

அந்தச் சின்னத் தோழன் காய்ச்சல் வெக்கையில் ஏதேதோ புலம்பினான். இடையிடையே "அம்மா, அம்மா" என்ற வார்த்தைகள் தெளிவாகக் கேட்டன. அவனது முனகல் சத்தம் மெல்ல மெல்ல குறைந்து போயிற்று. அமைதியானதொரு தூக்கம் அவனை பற்றிக்கொண்டது. கஜனது இமைகள் தூக்கத்திற்காக கெஞ்சின.



# தாய்க்கு நிகரானவன்

சிறிது கண்ணயர்ந்த கஜன், திடுக்கிட்டு விழித்து, நேரத்தைப் பார்த்தான். சாமம் 2 மணி. முகாமைச் சுற்றி காவலில் நிற்கும் தோழர்களை சந்தித்துக் கொண்டு வரப் புறப்பட்டான். அவன் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டு ஒவ்வொரு காவல் நிலைகளிலும் நிற்கும் தோழர்களிடம் சென்று கொண்டிருக்கையில் ஆற்றங்கரைக்கு முன்பாக இருந்த நிலையில் வெண்மணற் பரப்பில் மருத மரத்துக் கீழே நின்றுகொண்டிருந்த தோழன் கண்ணயர்ந்து விட்டான். கஜன் அவனருகில் சென்று அவனது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். காட்டில் அவன் பெயர் மீண்டும் ஒருகணம் எதிரொலித்தது.

www.tamilarangam.net

திடுக்கிட்டு எழுந்தான் அந்தத் தோழன்.

"என்னம்மான் இது?"

அவன் பதிலேதும் பேசாது நின்றான்.

காற்று மர உச்சிகளை கிழித்துக் கொண்டு சீழ்க்கை ஒலியால் கூவியது. ஆற்று நீரின் வேகம் அதிகரித்திருந்தது. நிலவை முகில்கள் மறைத்திருந்தன. இருட்டாயிருந்தது.

"மீண்டும் என்னம்மான்?"

"இல்லை..." அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

"நீ இல்லை இப்ப. செத்திட்ட அம்மான். உன்னை நம்பி அங்க தூங்கிக் கொண்டிருக்கிற தோழர்களும் செத்துப் போட்டினம்."

"என்னம்மான் சுகமில்லையா? களைப்பாயிருக்கிறியா? அப்படி ஏதுமெண்டா ஏனம்மான் என்னட்டை சொல்லக்கூடாதே?"

"அம்மான் உங்களுக்கு இதைப் பற்றி நான் பிரசங்கம் செய்யத் தேவையில்லை. தூங்கிப் போனோமோ போக வேண்டியதுதான் எல்லோரும்."

தேசத்தின் விடிவிற்காக எரியும் தீபமாயிருந்தாலும் கடும் குளிர்காற்று ஊத, காட்டிடையே நுளம்பு குத்த, அலுப்பும் சோர்வும் அவனையும் அறியாது கண்ணைச் சொருக, வீட்டார் நிலையெண்ணிக் கலங்கிவிட, இருப்பை மறந்து தூங்கிப் போய்விட்டான்.

எப்படியாயினும் இது பெரிய குற்றம். அவனை நம்பி எத்தனை உயிர்கள் முகாமில்.

கஜனது முகம் சீற்றத்தில் கொப்பளிக்கவில்லை. ஆயினும் கடுமையாக இருந்தான். பிரம்பைப் கையாளாதவன் தன் பிள்ளையைக் கெடுக்கிறான்.

ஆயிரம் தோப்புக்கரணங்கள் அவனுக்குத் தண்டனையாகக் கொடுக்கவேண்டும்.

என்ன செய்வது ஆற்றின் கரையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

பயிற்சி முகாம், பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று விட்டுவிடுவதா? அல்லது தண்டிப்பதா? ஏதோ யோசித்தவன், பின்னர், "நான் உனக்காக காவலில் நிக்கிறன். நீ போய்ப் படுத்துக்கொள்" என்று கூறி ஆயுதத்தை வாங்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போனான்.

அந்தத் தோழன் தனது பிழையை உணர்ந்துகொண்டு மனம் கலங்கினான்.

சிலவேளைகளில் கஜன் தோழர்களோடு சேர்ந்து விளையாடுவான். முகாமில் சமைத்த உணவுகளை அவர்களுக்குப் பரிமாறுவான். அவர்கள் ஒழுங்காக உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுகிறார்களா என அவதானிப்பான். அவர்களின் ஆயுதங்களை வாங்கிப் பரிசோதிப்பான். இப்படி முகாமைச் சுற்றி வந்துகொண்டிருக்கையில், ஒரு தோழன் மரத்தில் முதுகைச் சாய்த்தவாறு கவலை தோய்ந்த முகத்தோடு உட்கார்ந்திருப்பதை அவதானித்தான்.

அவனைத் தனியே அழைத்துச் சென்று ஆற்றங்கரை மேட்டில் இருந்து பேசினான்.

"என்னம்மான் சொல்லு."
"எனக்கு இங்க இருக்கப் பிடிக்கவில்லை. நான் வீட்டை போகப் போறன்."

கடினமான உடற்பயிற்சி, புதிய சூழல், புதியதோர் வாழ்க்கை இவற்றை எல்லோரும் மனம் ஒருமித்து வாழ்ந்துவிட முடியாதுதான் என உணர்ந்துகொண்ட கஜன்
"என்னம்மான் உனக்கு என்னைப் பிடிக்கலையோ?"
"இல்லை எனக்கு இங்க இருக்கப் பிடிக்கவில்லை."
"அப்ப எனக்குப் பிடிக்குதே? எனக்கு வீட்டுப் பாசம் இல்லை என்றா நினைக்கிறாய்?"
"நாங்களெல்லாம் பயிற்சி எடுத்து ஆமியை அடிச்சுக் கலைப்பது தானே முக்கியம். இல்லாட்டி இப்படி காடு மேடெல்லாம் நம்மிட சனம் தான் அலையும்."

அந்தத் தோழன் எதையோ புரிந்துகொண்டவனாக பிரகாசம் முகத்தில் பொருத சிரித்து நெடுநேரமாக கஜனோடிருந்து பேசிக்கொண்டிருந்தான்.

துணிவு மிக்க கெரில்லாப் படை அணியொன்று உருவாகி விட்டிருந்தது.

செங்கதிர் வீச்சில் பசிய காடு நிமிர்ந்தது. வெண்ணிறக் கொக்குகள் மருத மரத்திலிருந்து ஆகாயத்தில் சிறகடித்துப் பறந்தன. வானரங்கள் குதித்து விளையாடின. பூக்கள் மலர்ந்து சிரித்தன.

இராணுவக் கெடுபிடி மிகுந்த எல்லைப் பகுதிக்கு படையணியினர் நகர ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

கஜன் படையணிகளின் முன் நின்றுகொண்டிருந்தான். ஒரு படை அணியை உருவாக்கி விட்டு உயர்ந்து நின்றான். அவன் ஒரு பொறுப்பாளன், அவன் அந்தத் தோழர்களுக்கு அன்னையாய், தந்தையாய், அத்தனை பெரும் உறவாய் நின்றவன். அவர்களோடு அவன் காட்டு எல்லையைக் கடந்து சென்றான்.

காற்று வெளி..

தூரத்தே உள்ள கிராம வயல்களில் உள்ள நெல் நாற்றின் பசிய மணம் சுமந்த காற்று அவன் நாசியில் புகுந்தது. ஒவ்வொருவராக கட்டி அணைத்து வழியனுப்பிக் கொண்டிருந்தான்.

அவன் வளர்த்தவர்கள். அவன் உருவாக்கியவர்கள். தாய்க்குரிய அத்தனை துன்பமும், இன்பமும் அவர்களோடு அவன் பட்டிருக்கிறான்.

பயிற்சிக் காலத்தில் அவர்களின் குறும்புகள், அவர்களின் அன்பான சண்டைகள் அவன் கண்களில் நிழலாடின. அவர்கள் கையசைத்தவாறு நடந்து கொண்டிருந்தார்கள்.

வானம் நிர்மலமாக இருந்தது. கஜன் அந்த மருத மரத்தில் முதுகைச் சாய்த்தவாறு நின்றான். அந்த அணி வானின் எல்லைவரை சென்று துளியாய் மறையுமட்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.
அவனின் கண்கள் பனித்தன.
அப்போது வீசியகாற்று ஆற்றொழுக்கைக் காயவைக்க எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

கண்களை மூடி கனவு காண்பவனைப் போலிருந்தான். முகத்தில் சிரிப்பும் வேதனையும் மாறி மாறிப் படிந்தன.

**நசுக்கும் கரங்கள்....**

வெடித்துள்ளது. பங்காரப்பா தலைமையிலான கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் வேட்டையாடப்படுகின்றார்கள். தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுகின்றார்கள்; பிஞ்சுக் குழந்தைகளைக்கூட இனவெறியர்கள் விட்டுவைப்பதில்லை. இந்தக் கொடுமைக்கு, கர்நாடக இனவெறியர்களின் காடைத்தனத்திற்கு இதுவரை 50 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். சிங்கள இனவெறியர்களின் கொடுமைகளுக்கு சற்றும் குறைவில்லாத வகையில் கர்நாடக இனவெறியர்கள் காடைத்தனம் புரிகின்றார்கள். இதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதில், மத்தியஅரசும், கர்நாடக அரசும் அக்கறைகாட்டவில்லை என பகிரங்கமான குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன. ஈழத்தமிழன் சிங்கள இனவெறியரசால் தினந்தோறும் அகதியாக துரத்தியடிக்கப்படும்பொழுது, இந்தியத் தமிழனும் தனது சொந்த நாட்டில் அகதியா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# சிற்பிகள்

- விவேக் -

காலத்தால் செதுக்கப்பட்ட
சிலைகளல்ல இவர்கள்
ஒரு காலத்தை செதுக்கிய
சிற்பிகள்

காற்றுக்கும் திசையினை
கற்றுக் கொடுப்பவர்கள்
கனவுகள் இவர்களுக்கில்லை
இவர்களே எதிரியின் கனவுகள்

சூரியன் வந்து சுடுவதில்லை
வெப்பம் இவர்கள்
விழிகளின் உருவாக்கம்

காட்டுமரங்களே கூரை
மண் மேடுகள்
மலரணை
பனியில் குளிரெடுத்தால்
பகைவனின் பீரங்கிகளை எரித்தே
குளிர்காய்வர்

எதிரியின் எல்லைகள்
இவர்களின்
விளையாட்டுத் திடல்கள்

எதிர் கொள்ளும் நிமிடங்கள்
திருவிழாக்கள்
போரிடும் இரவெல்லாம்
தீபாவளிகள்

மரணம் இவர்களை
தொடுவதற்கஞ்சும்
கால்களில் வீழ்ந்து மண்டியிடும்

கரங்களில் இருப்பது
துப்பாக்கிகள் அல்ல
வரலாற்றின் நெம்புகோல்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித வெளிச்சங்கள்

**- அன்ரன் பாலசிங்கம் -**

**யார் இந்தக் கிருஷ்ணமூர்த்தி?**

**கடவுள் என்றும், ஞானி என்றும், புத்தனின் அவதாரம் என்றும், அனுபூதிமான் என்றும், ஆன்மயோகி என்றும், தத்துவதர்சி என்றும் நாம் பதிக்கும் சமூக முத்திரைகளுக்கும் நமக்குத் தெரிந்த சாதாரண அளவீடுகளுக்கும் அகப்படாத ஒரு அபூர்வ மனிதர்.**

**அவர் யார் என்பதை வரையறுத்துக் கொள்வது கடினம். அப்படி வரித்துக் கொண்டு நாம் அவரை புரிந்துகொள்ளவும் முடியாது.**

**'அவர்யார்' என்ற கேள்விக்கு, அவர் யாருமற்றவர் என்பதுதான் பொருத்தமான பதில். ஏனென்றால் அவர் தனது சுயத்தை, ஆளுமையை அகத்தின் முகத்தை அழித்துக் கொண்டவர்.**

அவர் ஒரு சாதாரண மனிதர். அழகான மனிதர். தொண்ணூறு ஆண்டுகள் வரை நம்மோடு இப்பூமியில் வாழ்ந்தார். இதில் எழுபத்தைந்து ஆண்டுகள் வரை நம்மோடு சதா கலந்துரையாடினார். போதித்தார். எழுதினார்.

மனித மனம் பற்றி மனித உறவுகள் பற்றி மனித விழிப்புணர்வு பற்றி, மனித விடுதலை பற்றி மனித வாழ்வின் சகல சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் மிகவும் கனிவுடன், மிகவும் அக்கறையுடன், அற்புதமான கவிதா மொழியில் பேசினார். எழுதினார்.

அவரது போதனைகள், எழுத்துக்கள், எல்லாவற்றையும் நாம் ஒன்று சேர்த்து தொகுத்துப் பார்த்தால் அவை ஒரு பெரும் தத்துவார்த்தமாகவோ, கருத்துக் களஞ்சியமாகவோ அல்லது ஒரு ஆன்மீக தரிசனமாகவோ அமையமாட்டா. அவை அனைத்துமே நம்மை நோக்கி எறியப்படும் கேள்விகள்; நம்மோடு சேர்ந்து நடத்தப்படும் தேடுதல்கள்; நமது கனவுகளைக் கலைத்து, நம்பிக்கைகளை உடைத்து விழிப்புணர்வை தூண்டும் விசாரணைகள். கிருஷ்ணமூர்த்தி நமக்கு எவ்வித தத்துவக் கோட்பாடுகளையும் நெறித்து விடவில்லை. ஆன்மீக ஞானதரிசனத்தை அளித்து விடவில்லை. உண்மைப் பொருளை கண்டு கொள்ள ஒரு மார்க்கத்தைக் காட்டவில்லை.

யுகம் யுகமாய் நமக்குள், நமது மனக்குகை இருட்டினுள், நாமே வரைந்து விட்ட நிழலுருவங்களை, புனைந்துவிட்ட பொய்மைகளை கண்டுகொள்வதாயின், 'நாமே நமக்கு ஒளியாக வேண்டும்' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுயதரிசனக் கண்ணாடி.



ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

மனித குலம் இன்று தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் ஒரு பயங்கர அணு யுத்தத்தின் விளிம்பில் நிற்கிறது. உலகமானது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதைபட்டுக் கிடக்கின்றன. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும் மனித இனம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகிறது. இனவாதம், மதவாதம் என்று வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன்முறைக்கு தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தம், போராட்டம், புரட்சிகள் வெடித்து மனிதனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கின்றான். இவ்விதம் மனித வாழ்வு சீர்குலைந்து கிடப்பது ஏன்? மனித உறவுகள் சிக்குப்பட்டு குரோதமடைவது ஏன்? மனிதர்களிடையே அன்பும், அமைதியும் ஒத்திசைவான வாழ்வும் செத்துப் போனது ஏன்? மனிதன் முழுமையோடு, நிறைவோடு, உள்ளும் புறமும் இசைவாக அமைதியோடு ஆனந்தமாக வாழமுடியாதா?

மனிதன் நாகரிகங்களைத் தோற்றுவித்தான். அவை அழிந்து போயின. சாம்ராஜ்யங்களைக் கட்டியெழுப்பினான். அவை இடிந்து விழுந்தன. சமுதாய வடிவங்களை உருவாக்கினான். அவை சிதைந்து போயின. மனிதன் மீண்டும் ஒரு உன்னதமான, புதுமையான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப விழைகிறான். சமுதாய அமைப்பை மட்டும், மீண்டும் மீண்டும் மாற்றியமைத்துவிடுவதால் மனிதன் சுபீட்சமடைய முடியுமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

> *"சமுதாயப் புரட்சியானது தனி மனிதனிலிருந்து தனி மனிதனின் உள்ளீடான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்."*

www.tamilarangam.net

தனிமனிதனுக்குப் புறம்பான எல்லாம் வல்ல ஒரு சக்தியாக, தனிமனிதனை ஆட்டிப் படைக்கும் சக்தியாக, தனிமனித தனித்துவத்தை நசுக்கி விடும் ஒரு சக்தியாக சமுதாய அமைப்பு இயங்கும் பொழுது அது மனித முழுமைக்கும், விடுதலைக்கும் வழி வகுக்குமா?

சமுதாயம் என்பதே சிக்கலான மனித உறவுகளைக் குறிப்பது அல்லவா? இந்த உறவு எனக்கும் உனக்கும் உள்ள உறவு. அவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள உறவு. தனிமனித உறவுகளின் ஒட்டமொத்தமான சிலந்தி வலைப் பின்னலாக சமூக அமைப்பு உருவகம் பெறுகிறது. தனிமனிதன் தனது மனவுலக இருட்டினுள் பாதை தெரியாது தடுமாறும் பொழுது, பொய்மைகளில் புதைந்து குழம்பும் போது, எனக்கும் உனக்குமுள்ள உறவுகளில் புரிந்துணர்வு இல்லாதபோது, அவனுக்கும் மற்றவனுக்குமுள்ள உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது சமுதாயத்தை மாற்றி அமைக்க விழைவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அக உலகத்தை அறவே உதாசீனம் செய்து புற உலகத்தை, பொருளுலகத்தை மட்டும் சீரமைப்பதால் மனித வாழ்க்கை சிறப்புற முடியுமா?

இவ்விதம் கேள்விகளை எழுப்பும் கிருஷ்ணமூர்த்தி, முதலில் தனிமனிதன் தனக்குள், தனது மனவுலகில் ஒரு புரட்சியைச் செய்யவேண்டும் என்கிறார்.

"சமுதாயப் புரட்சியானது தனிமனிதனிலிருந்து, தனிமனிதனின் உள்ளீடான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்படவேண்டும். தனிமனிதனின் உள்ளீடான புரட்சி நிகழாமல், மனவமைப்பு மாற்றப்படாமல், தனிமனிதனுக்குப் புறம்பாக, வெளியே நிகழும் எவ்வித புதுமையான சமூகப் புரட்சியும் உள்ளடக்கத்தில் உயிரற்றதாகவே இருக்கும். உயிர்த்துடிப்புள்ளதும் சிதைந்துபோகாததுமான ஒரு புதிய சமூக வடிவத்தைக் கட்டி எழுப்புவதாயின் தனிமனிதனின் மனவரங்கில் ஒரு புரட்சி நிகழ்வது அவசியம்" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

இந்த மனப்புரட்சியானது பிரக்ஞையின் விழிப்புணர்வாக, பிரக்ஞையின் அடித்தளத்திலிருந்து வெடித்தெழ வேண்டும்.

நானே என்னைப் புரிந்துகொள்ளாத வரை, வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்துகொள்ளாத வரை, பொய்மைகளின் இருண்ட சுவர்களுக்குள் நான் சிறைப்பட்டுக் கிடக்கும் வரை நான் மற்றவனைப் புரிந்து கொள்வது எங்கனம்?

இந்தச் சமூகமோ, உலகமோ என்னிடமிருந்து மாறுபட்ட ஒரு பூடகமான பொருளல்ல. நானே இந்தச் சமூகத்தையும், உலகத்தையும் சிருஷ்டித்துள்ளேன். இந்தச் சமூகமும், உலகமும் எனது சுயத்தின் அசிங்கமான வெளிப்பாடாக பொருளுருவம் பெற்றிருக்கிறது. எனது ஆசைகள், எனது கனவுகள், எனது விருப்பு வெறுப்புக்கள், எனது மனப்புற்றிலிருந்து பாம்புகளாகச் சீறும் துவேஷங்கள், வெறிகள் எல்லாமே இந்த சமூக உலகத்தை, சமூக உறவுகளைப் படைத்திருக்கிறது. எனவே, நானே இந்த சமூகம்: நானே இந்த உலகம்.

நான் சிஷ்ருடித்த இந்த சமூக உலகத்தை, நானாகவுள்ள இந்த சமுதாயத்தை, நானே மாற்றியமைப்பதானால் அந்தப் புரட்சி எனக்குள் தொடங்கப்பட வேண்டும். எனது மனவுலகக் களத்தில் அந்தப் போராட்டம் ஆரம்பமாக வேண்டும்.

இந்த உள்ளீடான மானசீக யுத்தத்தில் எனது விடுதலைக்கான ஆயுதம் எனது விழிப்புணர்வுதான். இந்த விழிப்புணர்வு வெளிச்சத்தில் எனது மனதின் வேஷங்களை, கோலங்களை நான் கண்டு கொள்ள வேண்டும். பொய்மைகளைக் கண்டு கொள்ளும் பொழுதுதான் உண்மை புலனாகிறது.

ஆன்மீக யாத்திரை என்றும், அகவுலகப் பயணம் என்றும், தியானம் என்றும், நமக்குள் ஒளிந்திருக்கும் ஆன்மத்தின் சூட்சமத்தை அறிந்து கொள்வதென்றும், நாம் உலகத்தைத் துறந்து, வாழ்க்கையைத் துறந்து, உறவுகளை அறுத்து, யுகம் யுகமாய் நடத்திய தேடுதலால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. - நாம் கடவுள் என்று தேடி அலைந்ததெல்லாம் நமது ஆசையின் நிழல்களன்றி வேறொன்றுமல்ல. கால விசாலத்தின் எல்லைகளைக் கடந்து சாவின் நியதியை வென்று, துன்பத்தின் அழுத்தங்கள் அகன்ற ஒரு நித்தியமான, சிரஞ்சீவியான பேரானந்தமான ஜீவிதத்தை கனவு கண்ட நமது விபரீதமான ஆசை கடவுளாகப் பிறந்தது. இந்தப் பூமியில் ஆயிரமாயிரம் கோவில்களைக் கட்டி அதைக் குடியமர்த்தினோம். அர்த்தமிழந்த, அசட்டுத்தனமான நமது வாழ்க்கைக்கு ஒரு பிரமாதமான அர்த்தமாக, ஒரு அலாதியான நம்பிக்கையாக, கடவுள் என்ற கருத்துருவத்தை நாம் தழுவிக் கொண்டோம். நமது மனமோ கனவுலகில், கற்பனையுலகில், நிதர்சனத்திற்குப் புறம்பான புராண உலகில் தூங்குகிறது. இந்தப் புராதன மனதால், புளித்துப்போன பழைமையில் புதைந்திருக்கும் மனதால், காலம் காலமாகப் பொய்களால்

> **"எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுணர்ந்து கொள்வதுதான் சுயதரிசனத்தின், அகப் புரட்சியின் ஆரம்பம்."**

வனையப்பட்ட மனதால், மூடநம்பிக்கைகளில் திளைத்துப்போன மனதால் சித்தாந்தங்கள், வேதாந்தங்களில் சிக்குப்பட்ட மனதால், கருத்துலகக் கோட்பாடுகளில் கட்டுண்ட மனதால் உண்மையைக் கண்டு கொள்ள முடியாது. நாம் ஒரு குருவை வரித்துக் கொண்டோ, ஒரு ஆன்மீக வழிகாட்டியைப் பின் தொடர்ந்தோ, ஆசிரமத்தில் தவமிருந்தோ, மந்திரங்கள் ஓதி, பிரார்த்தனைகள் செய்து அழுதுபுரண்டு ஆண்டவனை வேண்டியோ உண்மைப் பொருளை கண்டு கொள்ள முடியாது.

அறிவுப் பசியில் அலையும் நமது மனமோ கருத்துகளை விழுங்குகிறது. அனுபவத்தைத் தேடித்திரட்டுகிறது. ஞாபகப் பளுவை பெருக்குகிறது. நடமாடும் நூல்களாக, மற்றவர்களது செத்துப்போன கருத்துக்களை சதா அசைபோடும் இயந்திரமாக, எண்ணத்தின் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடக்கும் அறிவார்ந்த மனமும் உண்மையைக் கண்டுகொள்ளாது.

எண்ணத்தால், சிந்தனையால், அறிவால், அனுபவத்தால், மனிதன் காலம் காலமாய் வரைந்து கொண்ட கருத்துருவச் சித்திரங்கள் எல்லாம் பழைய மனதை, பயிற்றப்பட்ட மன்தை சார்ந்தவை. இந்தப் பழைய மூளையத்தின் படிமங்களால் மெய்மையின் கதவுகளைத் திறக்க முடியாது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

"மனித வாழ்வில் எண்ணம் ஏன் இத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்று விசாரித்துப் பார்த்தீர்களா? மனதின் அனுபவக் கடலிலிருந்து ஓயாது அலைமோதும் கருத்துருவங்களாக, படிமங்களாக சதா மனதை உலைத்துக் கொண்டிருக்கும் இந்த எண்ணத்திற்கு நாம் ஏன் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்? மிகவும் தந்திரமாக, மிகவும் நுட்பமாக, மிகவும் சாதுரியமாக இயங்கும் எண்ணமானது தன்னிச்சையில், தனக்கேற்றவாறு சகலத்தையும் திரிபு செய்து கொள்கிறது. நமது உறவுகளிலெல்லாம் பிளவையும், முரண்பாட்டையும் தோற்றுவிக்கிறது. இன்பம் துன்பம் என்று வாழ்வனுபவத்தைக் கூறுபோட்டு, எண்ணற்ற அனுபவக் கூறுகளை மனதின் நினைவறையில் குவித்துக் கொள்ளும் எண்ணமானது அந்த அனுபவக்கிடங்கிலிருந்தே மீண்டும் புனர்ஜென்மம் பெறுகிறது. வாழ்க்கைக்கு இந்த எண்ணத்தால் அளிக்கப்படும் விளக்கங்களும், வியாக்கியானங்களும் நேற்றைய, இறந்தகால அனுபவத்திலிருந்து பெறப்படுபவைதான். ஆகவே எண்ணமானது இறந்த காலத்தைச் சார்ந்தது; பழமையானது" என்று குறிப்பிடும் கிருஷ்ணமூர்த்தி, எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுணர்ந்து கொள்வதுதான் சுயதரிசனத்தின், அகப் புரட்சியின் ஆரம்பம் என்கிறார்.

எண்ண அசைவின் மையமாக எனது சுயம் இயங்குகிறது. இந்த சுயம் என்றால் என்ன? நான் என்று எனக்குள்ளிருந்து எண்ணிக் கொண்டிருப்பவன் யார்? அவதானிப்பவனாக, அனுபவிப்பவனாக, ஆசைப்படுபவனாக எனக்குள் என் அகமாக, அந்தரங்க ஆத்மாவாக, என் ஆளுமையாக, என் அகந்தையாக, ஆணவமாக இயங்கிவரும் எனது சுயம் எப்படித் தோற்றம் கொண்டது? இந்த உலகத்தில் எனக்கு எல்லாமே அதுவாக, அதற்காக வாழ்ந்து, அதற்காக அனுபவித்து அதற்காக துயரப்பட்டு, அதை நான் நிரந்தரமான நானாக நம்பி, அலாதியான பிரியத்தோடு நான் வழிபட்டுப் போஷிக்கும் இந்த நான் எனது சுயம், எனக்குச் சொந்தமானது எப்படி?

நான் பிறந்த கணத்திலிருந்து எனக்கொரு பெயர், எனக்கொரு சாதி, எனக்கொரு மதம் என்று எனது சமூகத்தின் சம்பிரதாயப் பொம்மையாக எனது சுயம் வனையப்படுகின்றது.

எனது வாழ்வனுபவத்திலிருந்து, எனது நினைவுலகத்திலிருந்து எனது பாரம்பரியத்திலிருந்து, எனது பண்பாட்டிலிருந்து, நான் எதிர் கொள்ளும் புறவுலகத்தின் எண்ணற்ற அழுத்தங்களிலிருந்து எனது சுயம் கருவாகி உருவாகிறது. எனது சுயத்தின் எலும்பும் சதையுமாக இருப்பதெல்லாம் எனது நினைவுகளின் நிழலுருவங்களன்றி வேறொன்றுமில்லை. எனது மனம் சுவீகரித்துக் கொண்ட கோடானுகோடி படிமங்களின் மையத்திலிருந்து எனது சுயம் வெடித்தெழுகிறது. ஆகவே நான் என்பதே ஒரு படிமம். ஒரு மையப்படிமம். காலத்தால் செத்த கருத்துருவங்களிலிருந்து, நினைவுகளின் கல்லறையிலிருந்து உயிர் பெற்று இயங்கும் ஒரு எண்ணம்.

"மிகவும் விழிப்புடன், கூர்மையான கவனத்துடன் கணத்திற்குக் கணம் உனது எண்ண அசைவுகளை அவதானித்துப்பார். நீ அவதானிப்பதும், ஆராய்வதும் உனது எண்ணமாக இருந்தால் நீ எதையும் கண்டுகொள்ளப் போவதில்லை. உனது விழிப்புணர்வின் பிரகாசத்திலேயே நீ உன்னைக் கண்டு கொள்ள வேண்டும். உனது விழிப்புணர்வு கூர்மையாகி, உனது கவனம் முழுமைபெறும் பொழுது அவதானிப்பவனாக, சிந்திப்பவனாக, பிரக்ஞையின் மையமாக இருந்துவரும் உனது சுயம் செயலிழந்து விடுவதை நீ கண்டுகொள்வாய். இவ்விழிப்பு நிலையில் மனமானது எண்ணத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்து,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அமைதி கொள்ளும் மனதில்தான் அன்பும், அழகும், ஆனந்தமும் சாத்தியமாகிறது" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

www.tamilarangam.net

வாழ்க்கை என்பதே ஒரு மாபெரும் இயக்கம்; ஒரு மாபெரும் சக்தி. நமது மனம், நமது எண்ணம், நமது உணர்வு, நமது ஆசைகள் எல்லாமே இந்த இயக்கத்தின், இந்த சக்தியின் வெளிப்பாடுகள் தான். நமது மனதில், எண்ணத்தில், உணர்வில், ஆசையில் பிணக்கும், போராட்டமும் தாண்டவமாடும் பொழுது, நமது உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது இந்த சக்தி விரயமாகிறது, வீணாகிறது. மனித மன்மானது விழிப்புணர்வு கொண்டு, தனக்குள் தெளிவு கண்டு, உள்ளும் புறமும் முழுமையான, அமைதியான, ஒத்திசைவான வாழ்வைத் தழுவிக் கொள்ளும் பொழுது எல்லையற்ற சக்தியாக அங்கு ஞானோதயம் பிறக்கிறது, என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

நமது பழைய மனம், பயிற்றப்பட்ட மனம் இறக்க வேண்டும் -அந்த சாவிலிருந்துதான் புதிய மனம், புரட்சிகர மனம் பிறக்கமுடியும். அந்தப் புரட்சிகர மனமே முழு மனித விடுதலைக்கும், சமுதாய விடுதலைக்கும் வழிவகுக்கும். கிருஷ்ணமூர்த்தி போதிக்கும் மனப் புரட்சியின் சாராம்சம் இதுதான்.


# கறுப்புப் பணம்



**சுவிஸ் வங்கியில், ராஜீவ் காந்தியின் கணக்கில் 4,625 கோடி இந்திய ரூபா. - சுவிட்சர்லாந்து பத்திரிகை தகவல்.**

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள வங்கியில் ரகசியமாக 2.5 பில்லியன் சுவிஸ் பிராங் பணத்தைப் போட்டு வைத்திருந்தார் என சுவிட்சர்லாந்துப் பத்திரிகையொன்று அம்பலப் படுத்தியுள்ளது.

சுவிஸ் வங்கியில் பணம் போட்டுள்ள சர்வாதிகாரிகள் என்ற தலைப்பில் ராஜீவ் காந்தியின் பெயரை அப்பத்திரிகை வெளியிட்டிருந்தது. மூன்றாம் உலக நாடுகளைச் சார்ந்த 14 முன்னாள் பிரதமர்களின் ரகசியக் கணக்குகளையும் அப்பத்திரிகை அம்பலப்படுத்தியுள்ளது. மூன்றாம் உலக நாடுகள் வாங்கியுள்ள கடன்களில், இந்தத் தலைவர்கள் கறுப்புக் கணக்குகளில் வைத்துள்ள தொகை பாதிக்கும் மேற்பட்டதாகும். இத்தலைவர்கள் தமது கணக்கில் போட்டு வைத்துள்ள தொகை 5,55,000 கோடி இந்திய ரூபா என்ற இரகசியமும் அம்பலத்துக்கு வந்துள்ளது.



ராஜீவ் காந்தியின் கறுப்புக் கணக்கு விவகாரம், 17-12-1991 அன்று இந்திய நாடாளுமன்றத்தில், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அமல் தத்தாவால் எழுப்பப் பட்டது. இவ்விவகாரம் தொடர்பான அவரது பேச்சுக்கள் யாவும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டது. எனினும், நாடாளுமன்றத்தில், அமல் தத்தா பேசிய பேச்சை "சண்டே மெயில்" என்ற வாரப்பத்திரிகை (டிச. 22-28) அப்படியே வெளியிட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழர் வரலாற்றில் புதுயுகத்தை பிறக்கச் செய்தவர்

# "தம்பி பிரபாகரன்"



திரு. பழ. நெடுமாறன் அவர்கள் "எரிமலை" இதழுக்கு வழங்கிய செவ்வி

**கேள்வி:**

தமிழீழப் போராட்ட வரலாற்றில் நீண்டகாலத் தொடர்பு கொண்டுள்ள நீங்கள் தமிழீழப் போராட்ட வளர்ச்சியின் தற்போதைய நிலை குறித்து என்ன கருத்துக் கொண்டுள்ளீர்கள்?

**பதில்:**

தமிழீழ விடுதலைப் போராட்டம் சரியான திசையில் வலுவாகக் காலூன்றி முன்னேறிக் கொண்டிருக்கின்றது. 1980 க்கு முன்னால் பயங்கரவாதக் குழுவாக விடுதலைப் புலிகள் இயக்கம் மாற்றாரால் கருதப்பட்டது. 1980 களின் தொடக்கக் காலகட்டத்தில் கொரில்லாக் குழுக்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. 1980 களின் நடுவில் கட்டுப்பாடு நிறைந்த வலிமையான கொரில்லாப்படையாக உருவெடுத்தது. 1990 களின் தொடக்கத்தில் சிறந்த மரபுவழி இராணுவமாகவும் தென்னாசியாவில் பலமிக்க அரசியல் இராணுவ சக்தியாகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் வீறுநடை போடுகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் அதனுடைய சாதனைகளும் வளர்ச்சியும் பிரமிக்கத் தக்கவையாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சிதைக்க சிங்களப் பேரினவாத வெறியர்களும், இந்திய உளவுத் துறையும் இடைவிடாது மேற்கொண்ட சீர்குலைவு வேலைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே உறுதியாக எதிர்த்து நின்றது. மற்ற இயக்கங்கள் யாவும் துரோகக் குழுக்களாக மாறி மாற்றார் வலையில் வீழ்ந்தன. இத்துரோகக் குழுக்களை ஒடுக்குவதிலும் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றனர்.

பேச்சு வார்த்தை என்ற பெயரால் இந்திய சிங்கள அரசுகள் விரித்த நயவஞ்சக நாடகத்தில் மற்ற குழுக்கள் யாவும் ஏமாந்த போதும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஏமாறவில்லை.

“மாகாண அரசின் முதலமைச்சராகலாம், தாராளமான நிதி உதவி பெறலாம்” என இந்திய-சிங்கள அரசுகள் ஆசைவலை விரித்த போதும், இராணுவ பயத்தைக் காட்டி மிரட்டிய போதும் உறுதியாக எதிர்த்து நின்று தமிழீழ இலட்சியத்துக்காக உறுதியுடன் போராடி வரும் பெருமை தம்பி பிரபாகரன் அவர்களுக்கு மட்டுமே உண்டு.

உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்திய இராணுவத்தை எதிர்த்து துணிகரமாகப் போராடி இறுதியில் தங்கள் மண்ணிலிருந்து அப்படைகளை வெளியேற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வைத்த பெருமை விடுத லைப் புலிகளுக்கே உண்டு.

முன்நூறு ஆண்டு காலமாக அன்னியர் கொடிபறந்த யாழ் கோட்டையைக் கைப்பற்றிப் புலிக் கொடியைப் பறக்க விட்ட பெருமை புலிகளுக்கு உண்டு.

தமிழீழப் போராட் டத்தைப் படிப்படி யாக மக்கள் போராட்டமாக மாற் றியிருப்பது மாபெ ரும் சாதனையா கும்.

www.tamilarangam.net

கர்நாடகத்திலே தமிழன் தாக்கப்படும்பொழுது அவன் யாரையும் நினைக்கவில்லை. வேலுப் பிள்ளை பிரபாகரனைத்தான் அவன் ஞாபகப்ப டுத்துகின்றான். இவைகள் எல்லாம் நிதர்சன மான உண்மைகள். கோபப்பட்டு பயனில்லை, பொறாமைப்பட்டு பயனில்லை. ஏனென்றால் தமிழினத்தை வாழவைப்பதற்கு தங்களுடைய இன்னுயிரைத் தர தயாராக இருக்கிறவர்கள் விடுதலைப் புலிகள்.

பாட்டாளி மக்கள் கட்சி -பண்டுருட்டி இராமச்சந்திரன் -

தமிழீழப் போராட்டம் சரி யான திசையில் முன்னேறிச் செல்கின்றது என்பதற்கு மேற்கண்டவை சான்றாகும்.

**கேள்வி:**

ஜெயலலிதா முதலமைச்ச ராகப் பதவியேற்றபின், தமிழீழப் போராட்டத்திற்குத் தமிழகம் வகித்து வந்த பாத் திரம் எந்தளவில், எந்த வகையில் மாற்றமடைந்துள் ளது?


**பதில்:**

தமிழீழப் போராட் டத்திற்கு, தமிழக மக்கள் வகித்து வரும் பாத்திரத் திற்கும் தமிழக முதலமைச்சர் வகித்துவரும் பாத் திரத்திற்கும் எத் தகைய சம்பந்த மும் இல்லை. முன்னாள் முதல மைச்சர் திரு. கரு ணாநிதி அவர்க ளாக இருந்தாலும் இப்போதைய முதலமைச்சர் செல்வி. ஜெயல லிதாவாக இருந் தாலும்சரி இருவ ரின் நிலையும் இப் பிரச்சனையில் ஒன்றுதான்.

"தமிழீழ விடுதலைப் போராட்டம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. கட்சி, மத, சாதி வேறுபாடின்றி தமிழ் மக்கள் அனைவரினாலும் ஆதரிக்கப்பட வேண்டிய போராட்டமாக அதைக் கரு தாமல் தங்களின் அரசியல் ஆதாயங்களுக்கான பிரச்ச னையாகவே இதை இவர்கள் கருதி வந்திருக்கின்றனர்.

5 கோடி தமிழ் மக்களின் முதலமைச்சருக்கு இப்பிரச் சனையில் பிரதான பாத்திரம் உண்டு. கீழ்க்கண்ட வற்றை அவர்கள் செய்தி ருக்க வேண்டும்.

மூன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்ட யாழ் கோட்டையில், 26 - 09 - 1990 அன்று தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டது.



www.tamilarangam.net



1. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தாய்த் தமிழகத்தின் ஆதரவைத் திரட்டித்தர நடவடிக்கை எடுத்தல்.
2. இந்தியாவில் உள்ள அரசியற் கட்சித் தலைவர்கள், பிறமாநில முதல்வர்கள் ஆகியோரின் ஆதரவைத் திரட்ட உரிய நடவடிக்கைகள் எடுத்தல்.
3. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு இந்திய அரசை வற்புறுத்தல்.
4. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான சகல நிதி மற்றும் உதவிகளைத் திரட்டல்.

தமிழீழப் புலிகளின் தீர்வே தமிழினத்திற்கு ஏற்ற நல்ல தீர்வு. பிரபாகரன் எடுக்கும் முடிவுதான் தமிழீழத்திற்கு மட்டுமன்று, தமிழினத்திற்கே உகந்தது. தமிழர்களுக்கென்று ஒரு தனி நாடு அமைந்தே ஆகவேண்டும் என்பதுதான் முடிவான கொள்கை! அதில் இம்மி குறைந்தாலும் அது தூய நெய்யில் எண்ணையைக் கலப்பதைப் போலச் சிறப்புக் குன்றிப் போகும்! தயிரில் தண்ணீர் கலப்பதைப் போல் நீத்துப் போகும்! கன்னெய்யில் மண்ணெய் கலப்பதைப் போல ஆற்றல் குன்றிப் போகும். **பிரபாகரன் மாவீரன்!** இப்பொழுதுள்ள நிலையில் தமிழினத்தின் அடிமைத் தனத்தை மீட்டெடுத்துத் தமிழர்களுக்கென்று ஒரு தனி நாட்டை உருவாக்க, பிரபாகரனைப் போன்ற மாவீரனே தேவை.

மேலே கண்ட நடவடிக்கைகள் எதனையும் திரு. கருணாநிதியும், செல்வி ஜெயலலிதாவும் செய்யவில்லை. மாறாக இப்பிரச்சனையில் இந்திய அரசு எதை விரும்புகிறதோ அதை இருவரும் செய்தனர்.

எதிர்கட்சியாக இருந்தபோது தமிழீழப் போராட்டத்தை ஆதரிப்பது போல பசப்பினார்கள். ஆளுங்கட்சியான பிறகு எதிராக மாறினார்கள்.

திரு. கருணாநிதி அவர்களின் மருமகன் மாறன் மத்திய அமைச்சராக இருந்த போது அவர்மூலம் பிரதமர் வி. பி. சிங் அவர்களிடம் நிலைமையை விளக்கி ஆதரவு திரட்டியிருந்திருக்கலாம். ஆனால் பாரதிய ஜனதாக் கட்சியின் கண்டனத்திற்கு அஞ்சி திரு. கருணாநிதி செயற்பட்டார். தமிழகத்தில் சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகளை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையில் அடைக்க திரு. கருணாநிதி தயங்கவில்லை. இன்று அதே வழியில் செல்வி ஜெயலலிதாவும் செல்கிறார்.

தமிழீழப் பிரச்சனையின் உண்மையான வடிவத்தை டில்லிக்கு உணர்த்துவதற்குப் பதிலாக டில்லியின் நோக்கமறிந்து அதற்கேற்பவே இருவரும் செயற்பட்டு வந்துள்ளனர்.

தமிழீழப் போராட்டம் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் அதற்குக் கைகொடுத்து உதவும் துணிவு படைத்த ஒருவர் தமிழக முதலமைச்சராக இல்லை என்பது வருந்தத்தக்கது. தங்கள் முதலமைச்சரின் இப்போக்கினைத் தமிழக மக்கள் விரும்பவில்லை.

**கேள்வி:**

நீங்கள் தலைமை வகிக்கும் தமிழர் தேசிய இயக்கத்தின் பிரதான நோக்கம் என்ன?

**பதில்:**

எங்கள் இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள்:-

1. தமிழ்நாட்டிற்குத் தன்னுரிமை (சுயநிர்ணய உரிமை) பெறப் போராடுதல்.
2. தமிழீழம் உருவாக உதவி புரிதல்.
3. உலகத் தமிழரிடையே ஒற்றுமை ஏற்படுத்தல்.
4. தமிழ்மொழி, வரலாறு, இலக்கியம், பண்பாடு, கலைகள் வளர்ச்சிக்குப் பாடுபடுதல்.
5. தமிழரிடையே சாதி, மத வேறுபாடுகளை அறவே போக்கி அனைவரும் தமிழரே என்ற இன உணர்வை ஊட்டுதல்.

**கேள்வி:**

தமிழக அரசியல் வாதிகளாலும், அறிஞர்களாலும் ஓர் நேர்மையான அரசியல் வாதி எனப் பொதுவாகக் கருதப்படுகின்ற நீங்கள் தமிழக அரசியலில் நீண்ட கால அனுபவம் பெற்றுள்ளீர்கள். அப்படியிருந்தும் ஆட்சிபீடத்தில் அமர முடியாதுள்

ஏதே, அதற்குக் காரணம் என்ன?

**பதில்:**

சந்தர்ப்ப வாதமும், பதவி வெறியும், ஊழலுமே அரசியல் என ஆகிவிட்ட தமிழகத்தில் நேர்மையாளன் எனப் பாராட்டப்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பதவி இல்லையே என்பது பற்றி நான் கவலைப் படவில்லை. இலட்சியத்தை விட்டுக் கொடுத்தாவது பதவியைப் பெறவேண்டும் என்பதை நான் வெறுகின்றேன். தமிழ் நாட்டில் இன்று நிலவும் அதிகார அரசியல் போக்கு நீண்ட காலம் நீடிக்க முடியாது. காலம் கனியும் வரை காத்திருப்பதுதான் விவேகம். நாம் எதிர்பார்க்கின்ற சமூக விழிப் புணர்வு மெல்ல மெல்ல வந்துகொண்டிருக்கின்றது.

**கேள்வி:**

அப்படியானால் இந்தச் சமூக மாற்றங்கள் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா?

**பதில்:**

அரசியல் என்பது பதவிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது அல்ல. மாறாக தொண்டினாலும் தியாகத்தினாலுமே கட்டப்பட வேண்டும். அதுதான் நிலைத்து நிற்கும் என்ற உண்மையை எமது மக்கள் மெல்ல உணரத் தொடங்கியுள்ளனர்.

வெற்றுக் கோஷங்களையும் வீண் ஆரவாரங்களையும் கண்டு மயங்கிய தமிழ்நாட்டு மக்கள் நடுவில் தமிழீழ இளைஞர்களின் அரிய தியாகங்கள் மகத்தான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன. கழுத்தில் நஞ்சுக் குப்பியுடனும், கையில் துப்பாக்கியுடனும் சிரித்த வண்ணம் சாவை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் வீரமும், தியாகமும் தமிழக இளைஞர்களைக் கவர்ந்து ஆட்கொள்ளத் தொடங்கியுள்ளன. தமிழக அரசியலில் படர்ந்துள்ள சந்தர்ப்பவாதக் கள்ளச் செடிகளையும், பதவி வெறி முட்புதர்களையும் சுட்டெரிக்கும் நெருப்பாக இது பரவி வருகின்றது. நாம் எதிர்பார்க்கும் சமூக மாற்றத்திற்கு இது வித்திட்டுள்ளது.

**கேள்வி:**

தமிழீழப் போராட்டம் பற்றியும், தமிழீழப் புலிகள் பற்றியும், தலைவர் பிரபாகரன் பற்றியும் உங்களது நீண்ட கால அவதானிப்பின் வெளிப்பாடு என்ன?

**பதில்:**

நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பிய பெருமை மிக்கப் போராட்டம் தமிழீழப் போராட்டமாகும். மிகக்குறுகிய காலத்தில் மகத்தான சாதனைகள் புரிந்து உலகநாடுகளின் விடுதலை இயக்கங்களுள் முதன்மை பெற்ற பெருமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உண்டு.

தமிழர் வரலாற்றில் புதிய யுகத்தைப் பிறக்கச் செய்தவர் "தம்பி பிரபாகரன்" ஆவார். வீரமே ஆரமாகவும், தியாகமே அணியாகவும் கொண்ட அவரால் இன்று உலகத் தமிழினமே பெருமை அடைந்துள்ளது. உலகத் தமிழினத்தின் விடிவெள்ளியாக அவர் திகழ்கிறார். நாளை அவர் தலைமையில் மலரப்போகும் தமிழீழம் உலகத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

## உங்களின் கவனத்திற்கு

கருத்தோட்டமுள்ள, ஆரோக்கியமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

"எரிமலை" இதழ் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.

உங்கள் பத்திரிகையை நெறிப்படுத்தவேண்டிய கடமை உங்களதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இயற்கையும் மனிதனும்

மனித இனம் பூமியில் தோன்றிய காலத்தில் இருந்து அதன் வாழ்க்கை முறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டு வருகின்றன. மனிதனும் அறிவியல் ரீதியாக மேம்பட்டு வருகின்றான். அதேவேளையில் அறிவீனமான வேலைகளையும் செய்து வருகின்றான். மனிதனின் அறிவு விருத்தியும், சிந்தனைத் திறனும் அவன் பல புதிய கண்டுபிடிப்புகளை செய்து வருவதற்கு உதவி வருகின்றன.

பண்டைய மனிதன் தன்னால் விளங்கிக் கொள்ளமுடியாத விடயங்களை தனக்கு அப்பாற்பட்ட சக்திகளின் செயற்பாடு என நம்பிக்கை கொண்டான். இத்தகைய நம்பிக்கை கடவுள் நம்பிக்கையாக மாறியதோடு, மனிதன் இயற்கையின் அனர்த்தங்களை கடவுளின் தண்டனை அல்லது கோபம் எனக் கருதியும் அதற்குப் பிரதியாக வேறு கைங்கரியங்களைச் செய்தும் வந்தான்.

இன்றைய காலகட்டத்தின் விஞ்ஞான வளர்ச்சியாலும், இயற்கையின் செயற்பாடுகளை நீண்டகாலமாக அவதானித்து வந்ததாலும் பண்டைய மனிதனின் மூடநம்பிக்கைகள் இல்லாதொழிவதுடன் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவற்றையும் முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.


நாம் வாழும் பூமிக் கிரகத்தில் பல பகுதிகளில் மனிதர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இனத்தால், மொழியால், மதத்தால், உடலமைப்பால், பண்பாட்டு பழக்கவழக்கங்களால் வேறுபட்டு இருகின்றார்கள். ஆயின் இதற்கான காரணம் என்ன? இந்தக் காரணத்தைப் பற்றி ஆராய முற்பட்ட போது பல புதிய உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டன. உடலியல் ரீதியாக மனிதனிலும், இயற்கையில் பூமிக்கிரகத்திலும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் படிப்படியானவையாகவும் விஞ்ஞான உண்மைகளுக்கு உட்பட்டனவாகவும் இருந்துள்ளன.

பூமியில், இயற்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவ்வாறு மனிதனிலும், மனித இனத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதை இதுவரை காலத்திலும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளதைக் கொண்டு நாம் அறிந்து கொள்ளல் முதலில் அவசியம். இதிலிருந்து தற்போது இயற்கையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மனிதனை எவ்வாறு பாதிக்கின்றன, பாதிக்கப் போகின்றன என்பதையும் அறிந்து கொள்வதோடு, இம் மாற்றங்களினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவுகளிலிருந்து மனித இனத்தைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கலாம்.

உயிர்களின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பற்றி நாம் அறிவதற்கு, பூமியின் தோற்றத்தையும் அதில் ஏற்பட்ட மாற்றங்களையும் பற்றி அறிவது முக்கியமாகும். பூமி தோன்றி பல கோடி வருடங்களாகிவிட்டன. அப்படியாயின் அது எப்படித் தோன்றியது என்பதை அறிய மனிதன் பிர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பஞ்சத்தில் உள்ள மற்றைய கிரகங்களையும், விண்மீன்களையும், அவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் சமாந்தரமாகக் கவனித்து வருகின்றான். இதிலிருந்து பல உண்மைகளையும், இன்னும் அவனால் விளங்கிக்கொள்ளாத செயற்பாடுகளையும் கண்டுகொள்கிறான். எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய விஞ்ஞான வளர்ச்சி இச்செயற்பாடுகளை மேலும் விளங்கிக் கொள்ளும்.



*கட்டுரைத் தொடர் - 1*

*ஆக்கம்: சங்கர்*

பொதுவாக கிரகங்கள் பல சேதன, அசேதனப் பொருட்களைக் கொண்ட ஓர் சேர்வையாக உள்ளது. ஆனால் நாம் காண்கின்ற நட்சத்திரங்கள் தூசுகளும், இலத்திரன்களும், சடத்துவ வாயுக்களும் கொண்ட ஓர் சேர்க்கையாக உள்ளன. கிரகங்கள் விண்வெளியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நட்சத்திரங்கள் இயங்கிக்கொண்டிருப்பவையல்ல. ஆனால் நட்சத்திரங்களிலுள்ள இலத்திரன்கள், சடத்துவ வாயுக்கள், தூசுக்களின் பெரும் மோதுகையால் அவை ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் வெப்ப, அமுக்க நிலைகள் மிகவும் உயர்ந்தவையாகும். இவை பூமியில் இருந்து பல கோடானு கோடி மைல்களுக்கப்பால் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. இதனால் இவை எமது கண்ணிற்கு சிறியனவையாகத் தென்படுகின்றன.

இவ் நட்சத்திரங்களின் வெப்ப, அமுக்க நிலைகள் அதிகரிக்கும் போது அவை வெடித்துச் சிதறுகின்றன. இவ்வாறு வெடித்துச் சிதறும்போது அவை விண்கற்களைத் தோற்றுவிக்கின்றன. இவ் விண்கற்கள் பல சேதன, அசேதன உறுப்புக்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. நட்சத்திரங்களின் அழிவின் போது தோற்றுவிக்கப்படும் இவ் விண்கற்கள் பலவிதமான கோணங்களில் பலவித வேகங்களில் பிரிந்து செல்கின்றன. இவ் விண்கற்கள் மீண்டும் ஒன்றுடன் ஒன்று மோதிச் சேர்ந்து கொள்கின்றன.

இவ் விண்கற்களின் மோதலின் போது அவற்றின் பருமன் அதிகரிப்பதுடன் அவற்றின் வேகங்களின் (சுழற்சி வேகம் உட்பட) வெப்பநிலையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு மேலும் மேலும் விண்கற்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒன்று சேரும் போது அவற்றின் அளவு அதிகரிப்பதுடன், அவை மேலும் மேலும் விண்கற்களை தம்மை நோக்கி கவரத் தொடங்கின.

இவ்வாறு விண்கற்களின் சேர்கையால்த்தான் பூமியும், சூரிய குடும்பத்தில் உள்ள மற்றைய கிரகங்களும் தோன்றின என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். நாம் வாழும் பூமிக் கிரகம் இத்தகைய நிகழ்வால் சுமார் 460 கோடி வருடங்களுக்கு முன் தோன்றியது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதே கால கட்டத்தில்தான் நாம் வாழும் சூரிய குடும்பத்திலுள்ள மற்றைய கிரகங்களும் உப கோள்களும் தோற்றம் கண்டன. பெரும் மோதுகையினால், கூடிய வெப்பநிலையில் தோன்றிய பூமியில் எவ்வாறு உயிரினங்கள் தோன்றியது என்பது ஓர் வியப்பான செயல். ஆனால் கடந்த காலத்தில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்த பல உண்மைகள் இவ் உயிரினத் தோற்றத்தை தெளிவுபடுத்தின.

உயிரினங்கள் தோன்றுமுன் பூமியில் ஏற்பட்ட புவியியல் மாற்றங்கள் எவை என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டு கொண்டனர். 460 கோடி வருடங்களின் முன் விண்கற்களின் மோதுகையால் பூமி தோன்றியபோது அது உருண்டையான எரிகுழம்பாக இருந்தது. அதன் வெப்பநிலையும் மிக அதிகமாக இருந்தது. இவ் அதிஉயர் வெப்பநிலையில் அதிக பொருட்கள் ஆவியாகி அதன் வளிமண்டல மேற்பரப்பில் சுமார் 500 கிலோமீட்டர் உயரத்திற்கு நிறைந்திருந்தன. இவை குளிர்ந்து ஒடுங்கி பூமியின் மேற்பரப்பில் மழையாக வந்தடைந்தன. ஆனால் மேற்பரப்பின் வெப்பநிலையால் மீண்டும் ஆவியாகி மேலே சென்றன. பின்னர் அவை மீண்டும் குளிர்ந்து பூமியை அடைந்தன. இவ்வாறு வளிமண்டலம் குளிர்தலும், ஆவியாதலும் நிகழ்ந்து பூமியின் மேற்பரப்பின் வெப்பநிலை குறைந்து அதன் மேற்பரப்பில் எரிகுழம்பு நிலையில் இருந்த பொருட்கள் குளிர்ந்து படியத் தொடங்கின. அதே வேளை அடர்த்தி கூடிய பொருட்கள் பூமியின் நடுப்பகுதியை சென்றடைந்தன. இதனால் குளிர்ந்த மேற்பகுதி எரிகுழம்பின் மேல் மிதந்து கொண்டுள்ளது.


உண்மையில் பூமிக்கிரகத்தின் வெப்பநிலை மேற்பரப்பில் இருந்து அதன் நடுப்பகுதி வரை கூடிக்கொண்டே செல்கிறது. இது பூமி குளிர்ந்து செல்வதைக் காட்டுகின்றது.

*தொடரும்....*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்